பக்கங்கள்:-பத்து | Registered as a News paper in Sri Lanka | விலை ரூபா. 6.00


# வலம்புரி

The Valampuri


ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம் கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி 05 | திங்கட்கிழமை (21.07.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 214

# அமைச்சரவையின் அங்கீகாரத்துடன்

# இடைக்கால சபையை வழங்கலாம்

## பிரதமர் ரணில் அறிவிப்பு

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகள் கோருகின்ற இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை அமைச்சரவையின் தீர்மானம் ஒன்றின் மூலமோ, அல்லது சுற்று நிருபம் ஒன்றின் மூலமோ அமைக்க முடியும். இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மெதுருகிரியாவில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைக்கும் நோக்குடன் நாடுபூராகவும் நடத்தத் திட்டமிட்டுள்ள முதலாவது பிரசாரக் கூட்டத்தை பொலநறுவை மெதுருகிரிய பகுதியில் ஆரம்பிதது வைத்துப் பேசும்போதே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே யுத்தநிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி சுமார் 18 மாதங்கள் கடந்தபோதும் இன்னமும் உண்மையான சமாதானம் ஏற்படவில்லை. ஆனால், கடந்த இரண்டு தசாப்த காலமாக இந்த நாட்டில் இடம்பெற்ற யுத்தம் மட்டும் நிறுத்தப்பட்டுள்ளது.

மிக நீண்ட காலமாக இடம்பெற்று வந்த யுத்தத்தை உடனடியாக நிறுத்தி சமாதானத்தைக் காண்பது என்பது மிகவும் கடுமையான ஒரு பணியாகும். நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் விடுதலைப் புலிகளும் அரசும் நம்பிக்கை கொண்டுள்ளதால் அச்சமாதானத்தைக் காண்பதற்கு நான் அயராது உழைத்து வருகிறேன்.



தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பித்து தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வரும் நோக்குடன் அவர்களின் கோரிகைக்கு ஏற்ப உத்தேச இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் திட்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் திட்டவரைபு

## வெளிநாடுகளில் உள்ள புலிகளின் சட்டநிபுணர்களுக்கு அனுப்பிவைப்பு

(கிளிநொச்சி)

இலங்கை அரசினால் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபை திட்ட வரைபு வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுக்கும் புலிகளின் தலைமைப் பீடத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகர் விஸ்வநாதன் உருத்திரகுமார், அரசியல் ஆலோ

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி விமான ஓடுபாதையை புனரமைக்க இந்தியாவின் உதவி!

(கொழும்பு)

பலாலி விமானப் படைத் தளத்தின் ஓடு பாதையைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு இலங்கை அரசு இந்திய அரசின் உதவியை நாடியுள்ளது.

பலாலி இராணுவத் தளத்தில் நிலை கொண்டுள்ள ஆயிரக்கணக்கான படையினரின் பாதுகாப்பான போக்குவரத்துக் கருதியே விமான நிலைய ஓடுபாதையை புனரமைப்புச் செய்யவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பலாலி விமான நிலைய ஓடுபாதையைப் புனரமைப்பதற்கான இலங்கை அரசின் கோரிக்கை தொடர்பாக இந்திய அரசு இன்னமும் பரிசீலிக்கவில்லை எனவும் தெரியவருகிறது. (வ)

## இடைக்கால சபை அமைந்தால் மீள் குடியேற்றம் சாத்தியமாகும்

### சு.ப.தமிழ்ச்செல்வன் பேட்டி

(நமது நிருபர்)

யுத்த அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்துள்ள மக்களின் மீள் குடியேற்றத்தை வடக்கு, கிழக்குக்கு அமைக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாகசபைக் கட்டமைப்பு துரிதப்படுத்துமென தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துணைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கில வார இதழான சண்டே ஒப்சேவருக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இப்பேட்டியில் சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்திருப்பதாவது,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க புலனாய்வு அதிகாரியின் சேவை நாட்டுக்குத் தேவைதானா?

### புலனாய்வு அதிகாரிகளிடம் பிரதமர் வினா

(கொழும்பு)

அரச புலனாய்வு நிறுவனங்கள் பிறநாட்டுப் புலனாய்வுச் சேவை நிபுணர்களின் ஆலோசனைகள் பெறுவதற்காக தொடர்ந்தும் வைத்திருக்க விரும்புகிறார்களா? என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புலனாய்வுத் தலைவர்களிடம் வினவியுள்ளார்.

அவர்களின் சேவைகள் தேவையில்லை என்னும் பட்சத்தில் அவர்களது சேவைகளை மீளாய்வு செய்ய முடியும் என்று கடந்த வெள்ளியன்று அலரி மாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார். பிற நாடுகளின் புலனாய்வு நிபுணர்களின் சேவை பலனுள்ளதாக இருப்பதாக தெரிவித்த புலனாய்வுத்துறை அதிகாரிகள் அத்தகைய ஆலோசகர்கள் தொடர்ச்சியாக நடைபெறும் புலனாய்வுத் தலைவர்களின் கூட்டத்தில் பிரசன்னமாயிருக்க வேண்டுமா? என்பது பற்றிக் கருத்துக் கூறவில்லை என்று அறியப்படுகிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்கேற்பது பேச்சுக்கள் தொடர்வதை பாதிக்கும்!

## அரசியல் அவதானிகள் கருத்து

(கொழும்பு)

அரசாங்கத்தினால் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக உத்தேச திட்ட வரைபின் பிரகாரம், இடைக்கால நிர்வாகம் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் பிரதிநிதிகள் தனித்தரபபாகக் கலந்து கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளமை பல்வேறு நெருக்கடிகளை ஏற்படுத்தும் என அரசியல் அவதானிகள் அச்சித்துள்ளனர்.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையில் மூன்றாம் தரப்பாகப் பங்குபற்றும் முஸ்லிம் பிரதிநிதிகளின் கோரிக்கைகள் விடுதலைப் புலிகளினால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக உத்தேசத் திட்ட வரைபில் முஸ்லிம் பிரதிநிதிகள் மூன்றாம் தரப்பாகக் கலந்து கொள்வதற்கு அரசாங்கம் முன்மொழிந்துள்ள போதும், அது விடுதலைப் புலிகளினால் நிராகரிக்கப்படும் பட்சத்தில் அரசாங்கம் பல நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும் என சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை, இடைக்கால நிர்வாகம் தொடர்பான பேச்சுக்களில் மூன்றாம் தரப்பாகக் கலந்துகொள்வதில் தாம் உறுதியாக இருப்பதாக முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.(த)

## வடக்குக்கிழக்கு இடைக்கால நிர்வாக சபை அமைக்க

# புலிகளிடம் கையளிக்கப்பட்ட திட்ட வரைபின் முக்கிய அம்சங்கள் சில

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆலோசனைக்கு அரசு சமர்ப்பித்துள்ள முன்வரைபு தொடர்பாக சில முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளன. ஊடகம் ஒன்று வெளியிட்ட தகவலின் படி புலிகளின் ஆலோசனைக்கு வழங்கப்பட்டுள்ள முன் மொழிவின் சில முக்கிய அம்சங்கள் இங்கே தரப்படுகின்றன. இதன் சில பகுதிகள் நேற்று எமது பத்திரிகையில் வெளியாகி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப்புலிகளை மீண்டும் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ளச் செய்வதற்காக இந்த யோசனைகள் அடங்கிய திட்ட முன்வரைபை அரசு புலிகளின் தலைமைத்துவத்திடம் சமர்ப்பித்துள்ளது.

**பிராந்திய நிர்வாக சபை**

இப்பிரதேசங்களை நிர்வகிப்பதற்காக வடக்குக்கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாகசபை ஒன்று உருவாக்கப்படும்.

1.சம்பந்தப்பட்ட தரப்புக்களின் முடிவின படி இச்சபைக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள்.

2.பின்வருவோர் இச்சபையில் இருப்பார்கள்.

(அ)இலங்கையரசாங்கத்தினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் இவர்களுள் மக்கள் கூட்டணியின் உறுப்பினர்களும் அடங்குவர்.

(ஆ)விடுதலைப்புலிகளால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள்.

(இ)முஸ்லிம் காங்கிரசால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள்.

3.பின்வரும் அம்சங்களை உறுதிப்படுத்தும் வகையில் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள்.

(அ)சபையில் விடுதலைப்புலிகளுக்கு பெரும்பான்மை.

(ஆ)மேற்கூறிய அம்சம் அவ்வாறே இருக்கும் நிலையில் முஸ்லிம் சிங்கள சமூகங்கள் போதிய அளவில் பிரதிநிதித்துவம் பெறுவார்கள்.

**4. தலைவர்**

சபைக்கான தலைவர் விடயத்தில் இருமாற்று யோசனைகள் முன் வைக்கப்படுகின்றன

முதலாவது:- இரு தலைவர்கள் இருப்பர் புலிகள் சார்பில் ஒருவர். அரசாங்கம் சார்பில் ஒருவர். இவர்கள் சபை உறுப்பினர்கள் மத்தியில் இருந்து தெரிவு செய்யப்படுவார்கள் சபையில் முன் வைக்கப்படும் எந்தவொரு முன் மொழிதலையும இரத்து (வீற்றோ) செய்யும அதிகாரம் இவர்களுக்கு இருக்கும்.

இரண்டாவது:- சபை உறுப்பினர்கள் மத்தியில் இருந்து ஒருவர் தலைவராக தெரிவு செய்யப்படுவார். இந்த இரண்டாவது மாற்று யோசனை ஏற்கப்படுமானால் சபையின் தீர்மானங்கள் தொடர்பாக பின்வரும் பந்தியிணைக்கப்பட வேண்டும்

சபையின் ஏதாவது ஒரு தீர்மானம் முஸ்லிம் அல்லது சிங்கள சமூகத்தவர்களை பாதிக்குமானால் பின்வரும் நிலைகளிலேயே அது செல்லுபடியாகும்:-

(அ)சபையின் பெரும்பான்மை ஆதரவு.

(ஆ)விடயத்தை பொறுத்து முஸ்லிம் அல்லது சிங்கள பெரும்பான்மையினரின் ஆதரவு.

**இடைக்கால நிர்வாக சபையின் அதிகாரங்களும் செயற்பாடுகளும**

சபையின் அதிகாரங்களும் செயற்பாடுகளும் பின்வரும் அம்சங்களுக்கு விரிவுபட்டிருக்கும் என்று முன்மொழியப்படுகின்றன.

1.பொலிஸ் பாதுகாப்பும் காணி, மற்றும் வருமானம் தவிர்ந்த ஆனால் புனர்வாழ்வு புனர்நிர்மாணம் மீள்குடியமார்வு உட்பட்ட விடயங்களில் தற்பொழுது அரசாங்கம் மேற்கொண்டு வரும் அதிகாரங்களிலும் செயற்பாடுகளிலும் அழுத்தமாக அதிகாரங்களை பிரயோகிக்கவும் பங்கு பெறவும் தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும்.

2. பங்கு பெறல் என்று மேலே குறிக்கப்பட்டதானது கொள்கை வகுத்தல் அமுல்படுத்தல் வழிகாட்டல்களை உள்ளடக்கியது ஆகும.

3.மேற்குறித்த (1),(2) அம்சங்கள் சம்பந்தப்பட்ட தரப்புகளின் விவாதத்துக்குரியன.

**விசேட ஆணையாளர்**

முன்மொழிவு:-

1. சபையெடுக்கும் முடிபுகளை செயற்படுத்துவற்காக விசேட ஆணையாளர் ஒருவர் அரச இயந்திரத்தை இயக்கும் அதிகாரத்துடன் நியமிக்கப்படுவார்.

2. சபையின் பெரும்பான்மை ஆதரவுடன் விசேட ஆணையாளர் நியமிக்கப்படுவார்.

3. விசேட ஆணையாளர் சபையில் வாக்களிக்கும் உரிமையில்லாத, சபைக்கு பதில் சொல்லும் நிலையில் இருப்பார்

4. அரசாங்க தரப்பற்ற முகவர்கள் அமைப்புகள் நிறுவனங்கள் செயற்படுத்தும் புனர்வாழ்வு அல்லது வளர்ச்சிப் பணிகளை ஒருங்கிணைப்பதற்கு சபை இன்னொருவரை அல்லது நிறுவனத்தை நியமிக்கலாம்.

**நிதியம்சங்கள்**

சபையிடம் பயன்படுத்துவதற்கென வழங்கப்படும் நிதியாதாரங்களை நியாயமான பகிர்ந்தளிப்புக்கு முறையான ஆலோசனைகள் நடத்தியபின் அதனைப்பயன் படுத்தும். வடக்குக்கிழக்கில் நிர்வாகம், மீளக்குடியமர்தல், புனர்நிர்மாணம் மேம்பாட்டுக்கான அம்சங்களை அரசமுகவர் அமைப்புகள் அரச சார்பற்ற நிறுவனங்கள் சர்வதேச அமைப்புகள் தனியார் முகவர் நிலையங்கள் மூலமாக அடையாளம் கண்டு கொள்ளலாம் சபையின் பயன்பாட்டுக்கென கிடைக்கும் நிதியாதரங்கள் பின்வரும் நிதிகளையும் உள்ளடக்கும் ஆனால் வரையறைக்கு உட்படாது.

(அ)வடக்குகிழக்கு புனர்நிர்மாணத்துக்காக வழங்குநர்களிடமிருந்து வருபவை

(ஆ)இலங்கையரசினால் வடக்குக்கிழக்கு புனர்நிர்மாணத்துக்காக ஒதுக்கப்படுபவை

(இ)வடக்குகிழக்குக்கென கிடைக்கும் ஏனைய நிதியாதாரங்கள்

2.வடக்குக்கிழக்கில்புனர்நிர்மாணம் புனர்வாழ்வு நிதியம் (NERRF)

வடக்குகிழக்கு மக்களின் உடனடித் தேவைகளை கவனிப்பதற்காக இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்டதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது இந்த நிதியத்தின் நோக்கத்தை விரிவு படுத்தும் வகையில் புனர்வாழ்வு புனர்நிர்மாணங்களுக்கும் நடுத்தர தேவைகளுக்கும் கிடைக்கும் வகையில் நிதியாதாரங் கள் திருத்தியமைக்கப்பட வேண்டும என்ற யோசனை கூறப்படுகிறது எனவே வடக்குகிழக்கு புனர்நிர்மாணநிதி என்பது(NERF) வடக்குகிழக்கு புனர்வாழ்வு புனர்நிர்மாணநிதி (NERRF) என பெயர்மாற்றப்பட வேண்டும் என யோசனை கூறப்படுகிறது.

**மாவட்டக்குழுக்கள்**

வடக்குகிழக்கு மாகாணங்களில் உள்ள எட்டு மாவட்டங்களுக்கும் மாவட்டக்குழுக்கள் ஏற்படுத்துவதற்கு யோசனை கூறப்படுகிறது

1.தலைவர், சபையின் உறுப்பினர் தொடர்புகள்

(அ)மாவட்டக் குழுக்களுக்கும் நிர்வாக சபைக்கும் இடையில் தொடர்பாளராக இருக்கும் வகையில் சபை உறுப்பினர்களில் இருந்து மாவட்ட குழுவின் தலைவர் சபையினால் நியமிக்சப்படுவார்.

(ஆ)ஏனைய உறுப்பினர்களும் சபையினாலே நியமிக்கப்படுவார்கள் குறித்த மாவட்டத்தின் இன தொகுப்புகளுக்கு போதிய அளவு பிரதிநிதித்துவம் வழங்குவதற்கு உரிய கவனம் செலுத்தப்படும்

(இ)நேரடியாக நிர்வாக சபையின் கீழ் மாவட்ட செயற்குழு செயற்படும் சபையின் தீர்மானங்களை செயற்படுத்தும் பொறுப்பு அதனிடம் இருக்கும்

(ஈ)மாவட்டக் குழுவின் செயலாளராகவும் பிரதம நிறைவேற்று அலுவலராகவும் மாவட்ட செயலர் இருப்பார்

(உ)மாவட்டத்துக்குட்பட்ட சபையின் சகல அதிகாரங்களும் நடவடிக்கைகளும் செயலாளர் ஊடாக மாவட்டக் குழுக்களுடன் ஒருங்கிணைக்கப்படும்.

**2. மாவட்டக் குழுக்களின் செயற்பாடுகள்**

(அ)சபையின் தீர்மானங்களை அமுல் படுத்துவது

(ஆ) மாவட்டத்துக்குட்பட்ட சகல வளர்ச்சி நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தல்.

(இ)சபையின் ஆலோசனைக்கான முன்மொழிவுகளை முன் வைத்தல

**மாவட்டக்குழுக்களின் அதிகாரங்கள**

(அ)ஒவ்வொரு மாவட்டக் குழுவும நிர்வாக சபையின் தீர்மானங்கள் சரியாக செயற்படுவதை உறுதிப் படுத்தும் அங்கமாக செயற்படும்.

(ஆ) ஒருமாவட்டகுழுவானது எந்த மாவட்டத்துக்காக அது ஏற் படுத்தபட்டதோ அதற்கு பொறுப் பாக இருக்கும் மாவட்ட அளவில் அது ஒரு நிர்வாக அமைப்பாகச் செயற்படும்.

(இ)ஒரு மாவட்ட குழுவானது நிர்வாகசபையின் அனுசரணையோடு அதன் கடமைகளை திறமையாக செயற்படுத்துவதற்காக தனிநபர்களின் அல்லது தனிநபர் குழுக்களின் உதவியை பெற்றுகொள்ள முடியும்.

**மாவட்ட துணைக்குழு**

சபையின் தீர்மானங்களை திறமாக செயற்படுத்துவதற்காக ஒவ்வொரு மாவட்ட குழுவும் துணைக்குழுக்களாக நியமித்துக் கொள்ளலாம் சபையின் அனுமதியோடு துணைக் குழுவின் உறுப்பினர்களை மாவட்ட குழுவே நியமித்துகொள்ளலாம்.

**இடைக்கால நிர்வாகசபையின் குழுக்கள்**

1.தனது பணிகளை செவ்வனே செயற்படுத்துவதற்கு பின்வரும் விசேட குழுக்களை நிர்வாகசபை ஏற்படுத்தி கொள்வது முன்னேற்ற கரமாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.

(அ) ஒரு பொருளாதார குழு

(ஆ) ஒரு உட்கட்டமைப்புகுழு

(இ) ஒரு அவசரசேவைகள் குழு

2.சபையின் உறுப்பினர்கள் 4 பேருக்கு மேல் ஒரு குழுவில் இருக்கலாகாது. தரப்புக்களால் தீர்மானிக்கப்படும் முறையில் நிபுணர்கள் மற்றும் அலுவலர்கள் இதில் சேர்க்கப்படலாம்.

3. குழுவின் தலைவர் சபை உறுப்பினராக இருக்கவேண்டும்.

4. சபையின் நேரடி மேற்பார்வையில் ஒவ்வொரு குழுவும் செயற்படும்.

**நடைமுறையின் கால அளவு**

சம்பந்தப்பட்ட தரப்புகளால் அங்கீகரிக்கப்படும் வரையறுக்கப்பட்ட கால அளவுவரை இந்த ஏற்பாடு நடைமுறையில் இருக்கும் என்றாலும் ஆறுமாதத்திற்கொரு முறை இது சம்பந்தப்பட்ட தரப்புகளின் மீள்பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும். (தி)

## சிறு விளம்பரம்


### வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?

23.07.2003ல் எல்லா இராசிகளுக்கும் வியாழ பகவான் கோசர ரீதியில் பெயர்ச்சியடைந்து பலாபலன்களை அளிக்கப் போவதை முன் கூட்டியே அறிந்து கொள்ளுங்கள். 25 வருட சோதிடப் புலத்தில் அனுபவம் கண்ட வெள்ளிவிழா நாயகன் திரு. V.A.சிவராசா வெளியிட்ட வியாழ மாற்றத்தை வாங்கி உங்கள் எதிர் காலத்தைத் திட்டமிடுங்கள். எங்கும் விற்பனையாகின்றது உங்கள் எதிர் காலம் பற்றி சிந்திக்கும் நேரத்தில் சந்தித்துப் பாருங்கள். 152B, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (7277)


## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம்1, தரம்2, இனை உடைய உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் நாடு முழுவதிலும் நடைபெறவிருப்பதால் இப்பரீட்சைக்கு தோற்ற விரும்புவோர் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் இலங்கை பரீட்சைத் திணைக்களம் பெல்வத்தை பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலும் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் பிரதேச செயளாலர் ஊடாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது (உ-10)

## உள்ளூராட்சிவார விளையாட்டு போட்டி முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுப் பிரதேச சபையினால் நெடுந்தீவு சனசமூக நிலையங்களுக்கு இடையே நடாத்தப்பட்ட உளளூராட்சி வாரப்போட்டிகளில் 45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தாச்சி, கயிறிழுத்தல் போட்டி முடிவுகளும்., ஆண்,பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி முடிவுகளும் வெளியிடப்பட்டுள்ளன.

கயிறிழுத்தல் (45 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்)

1ஆம் இடம் - சென் அன்ரனிஸ் சனசமூக நிலையம்.

2ஆம் இடம் - ஐக்கிய தீப சனசமூக நிலையம்

தாச்சிப் போட்டி (45 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்)

1ஆம் இடம் - சென் அன்ரனீஸ் சனசமூக நிலையம்

2ஆம் இடம் ஐக்கிய தீப சன சமூக நிலையம்

மரதன் ஓட்டம் (ஆண்கள்)

1ஆம் இடம் - அ.சுமணதாஸ் (சென் ஜேம்ஸ் சனசமூக நிலையம்)

2ஆம் இடம் - அ.இதயராஜன் (சென் ஜேம்ஸ் சனசமூக நிலையம்)

3ஆம் இடம் - இ.கோணேஸ்வரர் (ஐக்கிய தீப சனசமூக நிலையம்)

மரதன் ஓட்டம் (பெண்கள்)

1ஆம் இடம் - ச.டன்சியா (சென் ஜேம்ஸ் சனசமூக நிலையம்)

2ஆம் இடம் - ப.சிவசரிதா - (ஐக்கிய தீப சன சமூக நிலையம்)

3ஆம் இடம் - டே.கொன்சலா ஜெனி - (சென் ஜேம்ஸ் சனசமூக நிலையம்) (உ-68)

## இலங்கை சமாதானத்தில் இத்தாலி மிகுந்த ஆர்வம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் சமாதான முன்னெடுப்புகளுக்கு இத்தாலி அரசாங்கம் தனது பூரண ஆதரவை வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.

உரோம் நகரிலிருக்கும் இலங்கைத்தூதுவர் றொட்னி பெரேராவை அண்மையில் இத்தாலி பிரதமர் சந்தித்து கலந்துரையாடிய போதே சமாதான முன்னெடுப்புகளுக்கு தாம் பூரண ஆதரவு நல்குவதாக தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஐக்கிய நாடுகள் பொது அமர்வில் கலந்து கொள்வதற்காக எதிர்வரும் செப்ரம்பரில் இலங்கைப் பிரதமர் நியூயோர்க் செல்லும் வேளைதான் அவரைச் சந்திப்பதாக றொட்னிப் பெரேராவிடம் இத்தாலிப் பிரதமர் தெரிவித்துள்ளார். (உ-18)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்து இளைஞர் பேரவையின் மாணவ மன்றத்தின் இவ்வாண்டிற்கான உறுப்பினர் தெரிவும் பொதுக் கூட்டமும் இன்று பி.ப 3.00 மணிக்கு குமாரசுவாமி வீதியிலுள்ள வேதாந்த மடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் மூன்று மாணவர்களையும் ஒரு ஆசிரியரையும் சமுகமளிக்குமாறு மாணவர் மன்றத் தலைவர் கேட்டுள்ளார். (ந-5)

## வாகன விபத்தில் தாய்,தந்தை,மகன் பலி

(கொழும்பு)

காலியிள்ள பொசுப்பிட்டிய என்ற இடத்தில் நேற்று இடம் பெற்ற வீதி விபத்தொன்றில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

கணவன்,மனைவி மற்றும் மகன் ஆகிய மூவரும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது இன்னொரு வாகனத்துடன் அவர்களது மோட்டார் சைக்கிளில் மோதியதால் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

இவ்விபத்தினை அடுத்து வாகன சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ந-5)

## அதிகாலை வேளை திருட்டு முயற்சி குடும்பத் தலைவனால் முறியடிப்பு

(ஈச்சமோட்டை)

அதிகாலை வேளையில் திருடுவதற்காக வீட்டினுள் நுழைந்த திருடன், குடும்பத் தலைவன் சத்தமிட்டதைத் தொடர்ந்து அங்கிருந்து தப்பி ஓடியுள்ளான். இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பாண்டியன் தாழ்வுப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

அதிகாலை வேளை உடற்பயிற்சி செய்வதற்காக குடும்பத் தலைவன் வெளியே சென்று விட்டு காலை 5.30 மணியளவில் வீட்டுக்குள் சென்ற போது திருடன் ஒருவன் திருடுவதற்கு முயற்சி செய்த கொண்டிருப்பதை அவதானித்த அவர் சத்தமிட திருடன் அங்கிருந்து தப்பியோடியதாக தெரிவிக்கப்படுகிறது. (த-59)

வாழைச்சேனை—மட்டக்களப்பு

# ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிக்க அனுமதியில்லை

(கொழும்பு)

வாழைச்சேனை-மட்டக்களப்பு ரயில் சேவையினை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அனுமதியினை பாதுகாப்பு அமைச்சு இன்னும் வழங்கவில்லை என ரயில்வே பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு-மட்டக்களப்பு ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், மட்டு.-வாழைச்சேனை ரயில் சேவை ஆரம்பிக்கப்படாத காரணத்தால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை,திருகோணமலையில் இருந்து மட்டக்களப்புக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ரயில்வே ஊழியர்களை மீண்டும் திருகோணமலைக்கு மாற்றுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# ஓடும் பஸ்சில் ரகளை புரிந்தோர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

ஓடும் பஸ்சினுள் தகராறு புரிந்த நால்வர் மடக்கிப்பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் முகமாலையில் இருந்து யாழ்.நோக்கி வந்துகொண்டிருந்த 769 ஆம் இலக்க பேருந்தினுள் இடம்பெற்ற இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் வருவதற்கான பயணச்சீட்டினைப் பெற்ற நால்வர் மிதிபலகையில் நின்று ஏறுகின்ற மற்றும் இறங்குகின்ற பயணிகளுக்கு இடையூறு விளைவித்ததுடன், அடிக்கடி மணியை அழுத்தி சாரதிக்கு இடைஞ்சலை ஏற்படுத்தினர்.

அத்துடன், பேருந்தில் தட்டி பலத்த சத்தமெழுப்பி பாட ஆரம்பித்தனர்.

இதனை பொறுக்கமாட்டாத பயணிகள் பல தடவைகள் புத்திமதிகள் கூறியும் அவர்கள் கேட்காத நிலையில், மடக்கிப்பிடிக்கப்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர் (உ-4)

# இடைக்கால நிர்வாக சபை வரைபில் தேவை ஏற்படின் மாற்றம் செய்யவேண்டும்

## கூட்டமைப்பு உறுப்பினர்கள் கருத்து

(கொழும்பு)

தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் தற்போது அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபைத்திட்டம் அமைய வேண்டும் என தமிழ்க்கூட்டமைப்பு உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இத்திட்டவரைபு குறித்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் சுரேஸ் பிறேமச்சந்திரன் கருத்து தெரிவிக்கையில்,

இடைக்கால நிர்வாகத் திட்ட வரைபு, தமிழ் மக்களுக்கு நலன் அளிக்கும் பட்சத்திலேயே தமிழீழ விடுதலைப்புலிகள் அதனை ஏற்றுக கொள்வார்கள் என தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அப்பாத்துரை விநாயக மூர்த்தி கருத்து தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் தற்போது சமர்ப்பிக்கப்படடுள்ள இடைக்கால நிர்வாக சபை திட்ட வரைபில் குறைபாடுகள் இருந்தாலும் அரசாங்கம் அதனைக் களைய முன்வரவேண்டும்எனவும் தெரிவித்துள்ளார். (தி)

# மீன் குடியமர்வு எங்கே......?




# ஸ்ரீ. சு. க. – ம. வி. மு. கூட்டு பொ. ஐ. மு. கட்சிகள் முழு ஆதரவு

## செயலாளர் டி. எம். ஜெயரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் ஏற்படவுள்ள கூட்டமைப்புக்கு பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி.எம். ஜெயரட்ண இத்தகவலை வெளியிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் உடன்பாடு ஒன்று ஏற்பட்டு, தேர்தல் இடம்பெறும் பட்சத்தில் பொது ஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தவிர்ந்த கம்யூனிஸ்ட்கட்சி, சமசமாஜக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியன வெளியேறி பொது ஜன ஐக்கிய முன்னணி செயலிழக்கும் நிலை உருவாகும் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக பேசப்படுகின்ற நிலையில், டி.எம். ஜெயரட்ண இதனைத் தெரிவித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

டி.எம். ஜெயரட்ண மேலும் தெரிவிக்கையில்,

பொது ஜன ஐக்கிய முன்னணியின் கொள்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் எக்கட்சியுடனும் கூட்டை ஏற்படுத்துவதில் கூட்டணி சேர்ந்துள்ள கட்சிகளுக்கு ஆட்சேபனை கிடையாது.

கூட்டமைப்பு ஒப்பந்தம் குறித்த திகதி இன்னமும் நிர்ணயிக்கப்படாத நிலையிலும் கூட்டமைப்புத் தொடர்பான பேச்சுவார்த்தை தொடரும்.

கூட்டமைப்புத் தொடர்பான அடுத்த கட்டப்பேச்சுவார்த்தை ஜனாதிபதி தலைமையில் இவ்வாரம் இடம் பெறும் என்று தெரிவித்துள்ளார். (உ)

# பணிப்பெண்களுக்கு பயிற்சியளிக்க இலங்கையில் நிலையங்கள்

(கொழும்பு)

லெபனானில் வேலை பெற்றுச் செல்லும் இலங்கைப் பெண்களுக்கு பயிற்சியளிப்பதற்கு என வெளிநாட்டு வேலை வாய்ப்புப்பணியகம் 5 நிலையங்களை நிறுவவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி முதல் இரண்டு நிலையங்கள் கொழும்பிலும் ஏனைய நிலையங்கள் குருநாகல், கண்டி, அனுராதபுரம், ஆகிய மாவட்டங்களிலும் நிறுவப்படவுள்ளன.

இது பற்றி வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவர் சுஸந்தபெர்னாண்டோ தகவல் வெளியிடுகையில்,இத்தகைய பயிற்சியை வழங்குவதற்கு லெபனானில் உள்ள சர்வதேச தனியார் கம்பனியொன்று அனுசரணை வழங்கியுள்ளது.

லெபனானில் உத்தேச வேலைகளில் இந்த பயிற்சிக்கான செலவு ஏற்றுக்கொள்ளப்படும் என்றார். இதேவேளை,ஏற்கனவே ஏறத்தாழ 9 ஆயிரம் இலங்கையர்கள் லெபனானில் வேலைசெய்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கவை (உ-10)

யாழ். மாவட்ட கூ.சபை ஏற்பாட்டில்

# இளைஞர்,யுவதிகளுக்கு வேலை வாய்ப்புப் பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உயர் கல்வி கற்று முடித்த பின் வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை அவர்களுக்குக் கணனி உட்பட பல்வேறு பயிற்சிகளை அளித்து வருகின்றது.

நவீன உலகில் வளர்ச்சியடைந்து வரும் கணனித் தொழில்நுட்பத்தை யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்களின் அபிவிருத்தி வளர்ச்சிப் பணியில் உள்ளீக்கவே இவ் இளைஞர்,யுவதிகளுக்கு நாம் பல்வேறுபட்ட பயிற்சிகளை வழங்கி வருகிறோம்.

அண்மையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கணனிப்பயிற்சி நெறியின் 3வது தொகுதி தொடக்க விழாவில் கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ. கனகசபாபதி உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டுறவு நிறுவனங்களில் வினைத்திறனுள்ள பணியாளர்களை உருவாக்குவதற்காக கனிஷ்ட, சாதாரணதர, உயர்தர பரீட்சைகளை நடாத்தி வரும் கூட்டுறவுச் சபை தனது கல்வி விஸ்தரிப்பு வேலைகளைத் திறம்பட செயற்படுத்தும் நோக்கில் தற்போது பல்வேறு பயிற்சிகளை வழங்கி வருகினறது.

கூட்டுறவு நிறுவனங்களில் இருந்து இக்கணனிப் பயிற்சிகளுக்கு போதியளவு பணியாளர்கள் பங்குபற்றவில்லை. இதன் காரணமாகவே வெளியிலிருந்து படித்த வேலையற்றுள்ள இளைஞர்,யுவதிகளை இப்பயிற்சிக்காக உள்ளீர்த்துள்ளோம. எதிர்வரும் காலங்களில் இவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கூட்டுறவு நிறுவனங்களின் வேலை வாய்ப்புக்கள் வழங்கக்கூடிய ஏற்பாடுகளை நாம் மேற்கொள்வோம் என குறிப்பிட்டுள்ளார். (உ-15)

## மனைவி மரணத்திற்கு காரணம் யார்?

# அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மீது பொதுமகன் வழக்குத்தாக்கல்

## ரூ.10 மில்லியன் இழப்பீடு கோருகிறார்

(கொழும்பு)

பொலநறுவையைச சேர்ந்த பொது மகனான விவசாயி ஒருவர் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்திடமிருந்து பத்து மில்லியன் ரூபா (ஒரு கோடி) இழப்பீடு கோரி உச்ச நதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு வொன்றை தாககல செய்துள்ளார்.

ஏழு பிள்ளைகளின் தந்தையான சோமபால என்பவர் ஜூன் 15ம் திகதி குடும்பத்தினரை லான்மாஸ்ரரில் ஏற்றிக்கெண்டு சென்றபோது காருடன் மோதி விபத்து ஏற்பட்டது. உடனடியாக காயமடைந்த மனைவியையும் பிள்ளைகளையும் வாகன்மொன்றில் ஏற்றிச்சென்று பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதித்தார். முதுகெலும்பு நோவதாக மனைவி முறைப்பாடு செய்தார்.எகஸ்ரே அறைக்கு அவரை எடுத்துச் சென்றனர்.ஆனால், வைத்திய நிபுணர்களோ அங்கு இல்லை. அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். சிகிச்சைகள் எதுவும் வழங்கப்படவில்லை.

மறுநாள் நடுஇரவு வரையில் அவரை ஒரு அம்புலன்ஸ் வண்டியில் ஏற்றி கண்டி அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றனர். அங்கும் டாக்டர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். அதனால் மீண்டும் நோயாளியை பொலநறுவை வைத்தியசாலையில் கொண்டு வந்துவிட்டனர். ஆனால் சிறிது நேரத்தில் மனைவி இறந்துவிட்டார்.

தனது மனைவிக்கு உரிய நேரத்தில் சிகிச்சை வழங்கப்பட்டிருந்தால் அவர் மரணம் அடைந்திருக்கமாட்டார் என்று சோமபால தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அரச மருத்துவர் சங்கம் வறிய நோயாளிகளை தமது தனிப்பட்ட அனுகூலங்களுக்கு பலிக் கடாக்களாக பயன்படுத்தியுள்ளதென்றும் வரியிறுப்பாளர்களின் பணத்தில் இலவசக்கல்வியைப் பெற்ற மருத்துவர்களின் உயர் பணிக்கேற்ற நெறிமுறைகளை பேணியிருக்கவில்லை என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரச மருத்துவசங்க இழப்பீடாக ஒரு கோடி ரூபாவை வழங்கவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

டாகடர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதை தடுக்கும் வகையில் நீதிமன்றம் உத்தரவிடவேண்டும் எனறும் கோரப்பட்டுள்ளது. (ப)

# மண்டப வசதி

(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்கு,மேற்கு பிரதேச சபையின் மேல் மாடியில் அமைந்துள்ள மண்டபத்தை திருமண வைபவங்களுக்கும்,கலை கலாசார விழாக்களுக்கும் மிகக் குறைந்த வாடகைக்கு வழங்கவுள்ளதாகப் பிரதேச சபை அறிவித்துள்ளது. (உ-52)

## இன்னும் ஒரு தகவல்

# அலுமினியம்

''ஒரு திருமணத்திற்குப் போகவேண்டியுள்ளது. மணமக்களுக்கு என்ன பரிசு கொடுக்கலாம்?'' என்று ஒருவர் கேட்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். ''ஒரு அலுமினியக் கிண்ணத்தை வாங்கிக்கொண்டு போங்கள் என்று கூறுவீர்களா? அப்படி யோசனை கூறினால், உங்களையே ஒரு மாதிரியாகப் பார்க்கத் தொடங்கி விடுவார்கள். ''அலுமினியம்'' என்று கூறினாலே தரக் குறைவாக நினைக்கும் அளவுக்கு அலுமினியம் தரமின்றிப் போய்விட்டது.

ஆனால் நூறு வருடங்களுக்கு முன்னால், இப்படி ஓர்யோசனை கூறினால் உங்களை யாரும் தவறாக எண்ணியிருக்க மாட்டார்கள். நூறு வருடங்களுக்கு முன்னர் தாய்லாந்து மன்னர் பிரெஞ்சுக்குப் போயிருந்தாராம். அப்போது அவருக்கு பிரெஞ்சு சக்கரவர்த்தி மூன்றாம் நெப்போலியன் ஓர் பரிசு கொடுத்தாராம். என்ன பரிசு தெரியுமா? அலுமினியத்தால் செய்த ஒரு கைக் கடிகாரச் செயின். தாய்லாந்து மன்னருக்கு இதனால் மிகவும் பெருமை. அந்த உயர்ந்த பரிசை மிகவும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு விட்டாராம். அந்தக் காலத்தில் அலுமினியத்தின் விலை தங்கத்தின் விலையை விட அதிகம். தங்கம், வெள்ளி ஆகியவற்றை விட அலுமினியத்தை உயர்வாகக் கருதிய காலம் அது. அலுமினியத்திற்கு அப்படி ஒரு மதிப்பு. அதற்குக் காரணமும் இருந்தது!

பாக்ஸைட் (Bauxite) என்பது அலுமினியத்தில் இருக்கும் ஒரு தாதுப்பொருள். அதிலிருந்து (Alumina) அலுமினா என்னும் அலுமினியம் ஒக்சைட்டைப் பிரித்தெடுக்க வேண்டும். இப்படி பிரித்தெடுக்கின்ற முறை முந்தைய காலத்திலேயே தெரிந்திருந்தது. அதில் ஒன்றும் சிரமமில்லை.

ஆனால் அலுமினாவிலிருந்து அலுமினிய உலோகத்தைப் பிரித்தெடுப்பது மிகுந்த சிரமமான காரியமாகிப்போய்விட்டது. அலுமினியம் எனும் தனிமத்துக்கும் ஒட்சிசனுக்கும் இடையிலுள்ள பிணைப்பு மிக நெருக்கமானது. விஞ்ஞானிகள் கூட எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தனர். ஒட்சிசனிலிருந்து அலுமினியத்தைத் தனியாகப் பிரித்தெடுக்க முடியவில்லை.

டென்மார்க்கில் ஒரு விஞ்ஞானி இருந்தார். அவரது பெயர் எச். ஒயர்ஸ்டெட் (Hoersted) 1825ஆம் ஆண்டில் அவர் மிகுந்த சிரமப்பட்டு ஒரு வழியைக் கண்டு பிடித்தார். அவ் வழியில் அதிக கஷ்டத்துடன் செயற்பட்டு கொஞ்சம் அலுமினிய உலோகத்தைப் பிரித்து எடுத்தார். அவருக்குப் பின்னர், ஜேர்மனில் ஒரு விஞ்ஞானி ஃபிரீட்டிஷ் வோஹ்லர் (Freidrich Wohler) அவர் வேறொரு வழியில் அலுமினியத்தைப் பிரித்தெடுத்தார். இவர்கள் இருவரும் எடுத்த அலுமினியம் சுத்தமானது என்று கூறமுடியாது.

குறைந்த செலவில், சுலபமான முறையில் அலுமினியத்தை பிரித்து எடுப்பதென்பது விஞ்ஞானிகளுக்கு ஓர் பெரிய சவாலாகவே அமைந்தது. 1886ஆம்ஆண்டில்தான் அதற்கு ஓர் நேரம் வந்தது. அமெரிக்காவில் சார்லஸ் மார்ட்டின் ஹால் (Charles Martin Hall) என்று ஓர் மாணவன் சுலபமான சிக்கனமான ஓர் முறையில் அலுமினியத்தை கண்டுபிடித்துவிட்டார். இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், இதேசமயத்தில் பிரான்சில் போல் ஹெரூல்ட் (paul herount) என்ற ஓர் இளைஞரும்இதைக் கண்டுபிடித்துவிட்டார்.

அதற்கு அப்புறம் என்ன? உலகத்தில் அலுமினிய உற்பத்தி அதிகமாகி விட்டது. அதன் விலையும் சரிந்து போய்விட்டது. அலுமனியம் விஞ்ஞானிகளுக்கு விட்டிருந்த சவாலையும் சமாளித்தாயிற்று. இப்போது நான் உங்களுக்கோர் சவால் விடுக்கின்றேன். அதாவது கல்யாணமான கணவன்மார்களுக்கு. இந்தச் சவால் என்னவென்றால் நீங்கள் தைரியமாக உங்கள் மனைவியின் முன்னால் போய் நின்று ''உனக்கு அலுமினியத்தால் ஒரு செயின் செய்து கொடுக்க ஆசைப்படுகின்றேன'' என்று கூறிவிட்டு முழுதாகத் திரும்பி வர வேண்டும். அவ்வளவு தான் என்ன? தயாரா?

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# வயதை மறைத்த பெண் மரணத்தைத் தழுவினார்

(யாழ்ப்பாணம்)

வைத்தியரிடம் தனது உண்மை வயதை மறைத்த பெண் நோயாளியொருவர் பரிதாபகரமாகத் தனது உயிரை இழக்க நேரிட்டுள்ளது.

அண்மையில் நாவல ராஜகிரியாவில் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

ஆஸ்த்துமா நோயினால் நீண்ட நாட்களாக அவதியுற்று வந்த மேற்படி பெண், இந்நோய்க்குச் சிகிச்சை பெற ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

48வயதுடைய இவர், தனது வயது 31 என கூறியதையடுத்து, அங்கு அவ் வயதிற்குரிய வலுக்கொண்ட மாத்திரைகள் வழங்கப்பட்டன.

இவ்வாறு சிகிச்சை நீண்டகாலமாகப் பெற்றுக்கொண்டபோதும் நோய் குறையாமல் போகவே பல்வேறுபட்ட சிகிச்சைகளும் வழங்கப்பட்ட நிலையில் பலனளிக்காமல் நோய் முற்றிய நிலையில் சில தினங்களுக்கு முன் அப்பெண் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

உண்மையான வயதைக் கூற மறைத்தமையாலேயே இந் நோயாளி இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார் என அம் மருத்துவமனை வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன. (உ-15)

# இடைக்கால நிர்வாக சபை மூலம் புலிகளுக்கு கூடுதலான அதிகாரங்கள்

## சிஹல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைபின் மூலம் தமிழீழவிடுதலைப் புலிகளுக்கு அதிகளவு அதிகாரம் வழங்கப்படுவதாக சிஹல உறுமய குற்றம் சாட்டியுள்ளது.

கட்சியின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில்,

நிலப்பரப்பு, பொலிஸ் மற்றும் நிர்வாக அதிகாரங்கள் இத்திட்ட வரைபின் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

ஆயுதம் தாங்கிய குழுவொன்றுக்கு இவ்வாறான அதிகாரங்கள் வழங்குவது நாட்டை நாசப்படுத்தும் செயலாகும்.

கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களில் ஈடுபட்டபோது 7 வகையான அதிகாரத்திட்டங்களை வழங்க முன்வந்தன.

எனினும், அரசாங்கத்தால் இம்முறை வழங்கப்பட்டுள்ள இடைகாலத திட்டவரைபில் புலிகளுக்கு பல அதிகாரங்களை வழங்குவதாக உள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் இவற்றினையும் மறுத்து வேறு பல கோரிக்கைகளை முன் வைத்து வருகிறார்.

இவ்வாறு புலிகள் மறுத்து வருவது தம்மைப் பலப்படுத்துவதற்காகவே. கிண்ணியாவில் புலிகளால் அமைக்கப்பட்ட முகாம் இதற்குச் சான்று.

அத்துடன், மணலாறு விப்கம் பெகரா, வெலிகங்க, வாழைச்சேனை பாணவெவ ஆகிய இடங்களிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் பதுங்கு குழிகளை அமைத்து வருகின்றனர்.

இதனால் புலிகளுக்கு எதிரான தமிழ்க்கட்சிகள், அமைப்புகள், முஸ்லிம் கட்சிகள் ஆகியவற்றை ஒன்று திரட்ட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# அமைச்சுப் பதவிகளில் இருப்போர் இன ரீதியாக சிந்திக்கக்கூடாது

## ரெலோ அறிக்கையில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அரசாங்கமும், தமிழீழ விடுதலைப புலிகளும் யுத்த நிறுத்த உடன் படிக்கையை கடைப்பிடித்து, சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வரும் நிலையில், பிரதி அமைச்சர் அதாவுல்லா வடக்கையும், கிழக்கையும் பிரிக்கவேண்டுமென பகீரங்கமாக பேசி இருப்பதை அரசாங்கம் கண்டும் காணாததுபோல் இருக்கக்கூடாது.

இவ்வாறு தமிழீழ விடுதலைக் கழகத்தின் செயலாளர் நாயகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, சமாதானச் சூழ்நிலையில் இவ்வாறான பகீரங்கப் பேச்சுக்களை அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது.

அமைச்சர் பதவிகளில் இருப்போர் இன ரீதியாக நோக்காது, தேசிய நலன் சார்ந்து சிந்திக்கத் தவறியதன் விளைவாகவே நாடு பாரிய அவலத்தை எதிர்நோக்கி வருகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வின் அடிப்படை அம்சம் வடக்கு- கிழக்கு இணைந்த தாயகமே. சிறுபான்மை இனமாக இருந்து கொண்டு பேரினவாதிகளின் நலன் சார்ந்து சிந்திப்பது கவலையளிக்கிறது.

சகல தமிழ்க்கட்சிகளும் வடக்கு- கிழக்கு இணைப்பை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. இந் நிலையில் பிரதி அமைச்சர் அதாவுல்லா குறிப்பிடப்பட்டிருப்பது தமிழ், முஸ்லிம் மக்கள் இடையே விரிசலை ஏற்படுத்தலாம்.

இன்றைய போர்நிறுத்த உடன்படிக்கையும், சமாதானப் பேச்சுவார்த்தைகளும் ஒப்பற்ற தியாகத்தினாலேயே ஏற்பட்டன.

பேரினவாதிகளுக்கு துணை போகும் வகையில் முஸ்லிம் அரசியல்வாதிகள் செயற்படக் கூடாது எனவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

## இராசி பலன்

**21.07. 2003**

**(ஆடி 5, திங்கள்)**

அட்டமி- பி.இ. 3.40வரை

ரேவதி - காலை 6.44வரை

இராகுகாலம்- 7.31-9.01

சுபநேரம்- 12.01-01.31

**மேடம்**
எடுத்த கருமங்கள் கைகூடும், உறவினர் வருகை, தேக நலன், நல்ல சிந்தை.

**இடபம்**
சயனசுகக்குறைவு, தொழில் மந்தம், வீண் அலைச்சல், சத்துரு ஜெயம்.

**மிதுனம்**
பெருமையடைதல், தடைப்பட்டகாரியம் கைகூடும், செய்தொழில் விருத்தி, கலந்துரையாடல்.

**கடகம்**
தூரதேசச் செய்தி, புதிய நிலை மாற்றம், பிறருக்கு உதவுதல், முயற்சி பலிதம்.

**சிங்கம்**
நல்ல மனைவாசம், பித்த ரோகம், எடுத்த கருமங்கள் தாமதமாகும், புதிய திட்டம்.

**கன்னி**
எதிர்பாராத மனஸ்தாபம், அதிஷ்டக்குறைவு, முயற்சி தாமதம், உடல் வியாதி.

**துலாம்**
சொல்வாக்கு, விருந்துபசாரம், குடும்ப மகிழ்ச்சி, காரிய நன்மை.

**விருச்சிகம்**
மனமகிழ்ச்சி, பிறருக்கு உதவுதல், புதிய முயற்சி, உடல் நலம்.

**தனுசு**
வியாபார நன்மை, சிறுவியாதி, மனக்கிலேசம், காரியதாமதம்.

**மகரம்**
நண்பர்கள் உதவி, மாதா சுகம், மாணவர்கல்வியில் ஆர்வம், ரோக நிலை.

**கும்பம்**
பிரயாண நன்மை, பெரியோரால் மதிக்கப்படுதல், வருமானம் அதிகரிக்கும், காரிய அனுகூலம்.

**மீனம்**
விதண்டாவாதம், கருமங்கள் தாமதமாகும், வீண் செலவு, திடீர் நன்மை

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# நெடுந்தீவில் நடமாடும் வங்கிச்சேவை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக்கிளையின் நடமாடும்சேவை ஒன்று எதிர்வரும் 25,26,ஆம் திகதிகளில் நெடுந்தீவில் இடம்பெறவுள்ளது.

மேற்படி மக்கள் வங்கியின் நடமாடும் சேவை, பாடசாலை மாணவர்களுக்காக 25ஆம்திகதி வெள்ளிக்கிழமை நெடுந்தீவு மங்கையற்கரசி வித்தியாலயம், யா/ நெ.சுப்பிரமணிய வித்தியாலயம், யா/ நெ. மகாவித்தியாலயம், யா/நெ.சைவப்பிரகாச வித்தியாலயம், யா/நெ.றோமன கத்தேலிக்க பெண்கள் வித்தியாலயம, யா/நெ.மாவலித்துறை பாடசாலை, யா/நெ.சீக்கிரியான் பள்ளம் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இடம்பெறவுள்ளது.

அதேவேளை, பொதுமக்களுக்காக வங்கிச்சேவை 26ஆம்திகதி சனிக்கிழமை யா/நெடுந்தீவு மகாவித்தியாலயத்திலும் இடம்பெறவுள்ளது. (க-75)

# வடக்கு-கிழக்கு புனரமைப்பு பிரதமரின் பணிப்புரைக்கமையவே கல்வி அமைச்சின் செயற்பாடுகள்

## அமைச்சர் கபீர் ஹாஷிம் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த காலங்களில் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட போர் அனர்த்தங்களின் போது புறக்கணிக்கப்பட்டிருந்த பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதைப் பிரதான இலக்காகக் கொள்ள வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர்களுக்கு விடுத்துள்ள பணிப்புரைக்கு இணங்கவே மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் வன்னிப்புனர்வாழ்வு அமைசசின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இவ்வாறு கூறியுள்ளார் மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் கபீர் ஹாஷிம்.

அண்மையில் முஹம்மதியாபுர கிராமத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு மேலும் உரையாற்றிய அமைச்சர்,

புத்தளம் மாவட்ட இளைஞர்கள் மற்றும் வடமாகாண இளைஞர்களின நலன்களை கருத்திற் கொண்டு தமிழ்மொழி மூலமான தொழில் நுட்பக்கல்லூரி ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

அமைச்சர் நூர்தீன் மஷூரும், நானும் பிரதமருடன் இது குறித்துக் கலநதாலோசித்து இக்கல்லூரியை அமைக்க அனுமதியைப் பெற்றுள்ளோம் என்றார்.

அமைச்சர் நூர்தீன் மஷூர் உரையாற்றுகையில், இத்தொழில் நுட்பக் கல்லூரியின் மூலம் புத்தளம் மாவட்டத்தில் தங்கியுள்ள அகதிக் குடும்பங்களைச் சேர்ந்த, வேலை வாய்ப்பு எதுவுமின்றி வாழும் 10 ஆயிரம் இளைஞர் யுவதிகள் இத் தொழிற்பயிற்சிகளைக் கற்று வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் ஏற்படும்.

தற்போதைய அரசு அகதிகள் நலனில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருவதைக் காணக்கூடியவாறு உள்ளது.

அகதிகள் அதிகமாக வாழும் சகல பிரதேசங்களிலும் பயனுள்ள பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்வைக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இதற்கென எமது மக்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாராட்டையும், நன்றியையும் தெரிவிக்க வேண்டியது அவசியம் என்றார். (8)

# சமாதானத்தின் பால் தென்பகுதி மக்களுக்கிருந்த நம்பிக்கை வீழ்ச்சி

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் மாதாந்தக் கருத்துக்கணிப்புத் தெரிவிப்பு

(தென்மராட்சி)

தென்பகுதிப் பெரும்பான்மை யின மக்கள் மத்தியில் சமாதானம் குறித்த நம்பிக்கை வீழ்ச்சிப் போக்கைக் கண்டு வருகிறதுடன், சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் மீதும் நம்பிக்கையீனம் கொண்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஊடகப்பேச்சாளர் கலாநிதி சுனந்த தேசப்பிரிய,

அரசு-புலிகள் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப் பட்ட பின்னர், மாற்றுக்கொள்கை களுக்கான நிலையம் நாடளாவிய ரீதியில் சமாதானம் குறித்து கருத்துக் கணிப்பை மாதாந்தம் நடாத்தி வருகின்றது.

கடந்த மாதம் இதுதொடர்பில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பின் விபரத்தை நேற்றைய தினம் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் வெளியிட்ட சுனந்த தேசப்பிரிய மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய உபதலைவர் ஸ்ரீசக்திவேல் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் கருத்துக் கணிப்புக் குறித்து மேலும் விளக்கமளிக்கையில்,

கடந்த 20வருடங்களாக நாட்டில் இடம்பெற்றுவந்த இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட்டு நிரந்தர சமாதானம் மலரும் என்ற நம்பிக்கையை தென்பகுதியில் உள்ள 70வீதமான மக்கள் இழந்து விட்டனர்.

30வீதமான தென்பகுதி மக்களே தற்போது சமாதானத்தின் பால் நம்பிக்கையுடைவர்களாகக் காணப்படுகின்றனர்.

சமாதானப் பேச்சுவார்த்தையில் அனுசரணையாளராகச் செயற்பட்டுவரும் நோர்வே அரசு மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆகியவற்றில் இந்த மக்களுக்கிருந்த நம்பிக்கை அண்மைக் காலங்களில் அற்றுப்போய்விட்டதே இந்த நிலைப்பாட்டிற்கு வரக்காரணமாகும்.

தவிரவும், தென்பகுதியில் சமாதானத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கண்காணப்புக் குழுவினர், நோர்வே அனுசரணையாளர்களை அகற்ற வேண்டும் என்ற எண்ணப்பாடுகள் என்பன அதிகரித்துள்ளன.

இதேவேளை, போர்நிறுத்தம் ஏற்பட்ட ஒன்றரை வருடத்திற்கும் மேற்பட்ட காலப்பகுதியில் இரண்டாயிரம் யுத்தநிறுத்த மீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று சுட்டிக்காட்டினார்.

இந் நிகழ்வில், தென்பகுதியில்இருந்து வந்த 20 ஊடகவியலாளர்களும் பங்குகொணடனர். (உ-77)

# மக்கள் வங்கியை தனியார் மயப்படுத்த

# சர்வதேச நாணய நிதியத்திற்கு உறுதிமொழி

## சொக்ஸி வழங்கியிருப்பதாக பொ.ஐ.மு.குற்றச்சாட்டு

(கொழும்பு)

நிதியமைச்சர் சொக்ஸி கொழும்பு ஹில்றன் கோட்டல், மக்கள்வங்கி உட்பட அரசாங்க நிறுவனங்களை எதிர்வரும் ஆண்டு மார்ச் மாதமளவில் தனியார் மயப்படுத்தப்போவ தாக சர்வதேச நாணய நிதியத்திடம் உறுதியளித்துள்ளார் என பொதுஜன ஐக்கியமுன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

பொருளாதார நிதிக் கொள்கைகள் தொடர்பான ஒப்பந்தத்தின் கீழ், வெளிநாட்டு நிதியுதவியைப் பெற்றுக்கொள்வதற்காக மேற்படி நிதியமைச்சர் உறுதிமொழியை வழங்கி சர்வதேச நாணய நிதிய முகாமைத்துவ பணிப்பாளருக்கு கடிதம்ஒன்றை அனுப்பியுள்ளதாக பொதுஜன ஐக்கியமுன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

2003ல் தனியார் மயப்படுத்தப்படும் நிறுவனங்களின் பட்டியல் தம்மிடம் இருப்பதாகவும் தெரிவித்த சரத் அமுனுகம, மக்கள் வங்கியினை மீள் நிர்மாணம்செய்வதை சாட்டாகக்கொண்டு நிதியமைச்சர் செயற்படுகிறார்.

உதவிவழங்கும் மாநாட்டில் பெரியளவிலான நிதியினை வழங்குவதாக உறுதியளித்திருந்தும் கூட இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதான பேச்சுக்களாலும் பிரதமரின் பிழையான நிர்வாகத்தினாலும் ஒரு சதம்கூட இன்னமும் பெற்றுக் கொள்ளப்படவில்லை.

வரலாற்றில் முதல்தடைவையாக 20ஆயிரம் மில்லியனை திறை சேரிக்கு பெற்றுக்கொள்ளும் வழி துறைகளை அரசினால் கண்டு பிடிக்க முடியாதுள்ளது.

அரசாங்கம் தனியார்துறை வர்த்தகர்களிடமிருந்து 'வற்' எனும் பெறுமதி சேர்வரியை சேகரிக்காமல் விட்டதன்மூலம் இப்பணம் திறை சேரிக்கு வந்து சேரவில்லை. இது ஐ.தே.மு.அரசின் நிதித்துறை முகாமைத்துவத்தில் பலவீனத்தை எடுத் துக்காட்டுகிறது என்று மேலும் அடுக்கடுக்காகக் குற்றம் சுமத்தியுள்ளார். (உ)

## வலுவூட்டல் பயிற்சிகள் மீண்டும் ஆரம்பம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவிலுள்ள விளையாட்டுக்கழக அங்கத்தவர்களுக்கான வலுவூட்டல் பயிற்சிகள் மண்டும் நெடுந்தீவு மத்தி புதிய பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகியுள்ளன.

எனவே மேற்படி பயிற்சி நிலையத்தில் முன்னர் பயிற்சிபெற்ற வீரர்களும் புதிதாக பயிற்சிபெற விரும்புபவர்களும் உடனடியாக பயிற்சி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஏ-68)

## விபத்துஓய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தெங்கு பனம் பொருள கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம், தனது அங்கத்துவ சங்கங்களின் ஊடாக, தெங்குப் பனம் பொருள் வல்லுநர்களுக்கு விபத்து ஓய்வூதியம் வழங்கும் திட்டமொன்றை அமுல்படுத்தவுள்ளது.

இதற்காக 72ஆயிரத்து 708ரூபாவினை வழங்குவதற்கு பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேசமூர்த்தி அனுமதி வழங்கியுள்ளார். (உ-15)

# புலமைப் பரிசில் வாரம் செப்ரெம்பரில் செயற்படவாரம்பம்

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் செயற்படுத்தப்படும் சிசுசவிய புலமைபரிசில் திட்டத்தின்கீழ் 20 ஆயிரம் புலமைப்பரிசில்களை எதிர்வரும் ஆகஸ்ட் மாதமுடிவில் பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

குறைந்த வருமானமுடைய குடும்பத்தைச் சேர்ந்த பாடசாலை சிறுவர்களுக்கு 40 ஆயிரம் புலமைப்பரிசில்களை வழங்குவது என்ற அரசின் திட்டத்துக்கமைய மூன்றாம் நிலைக் கல்வியமைச்சின் ஏற்பாட்டில் இது இடம் பெறவுள்ளது.

இத்திட்டம் கடந்த வருடம் மொனராகல,அம்பாறை,அம்பாந்தோட்டை உட்பட கஷ்டப்பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் இதனை சகல மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கும் நோக்கில் ''புலமைப் பரிசில் வாரம்'' என்னும் பெயரில் எதிர்வரும் செப்ரெம்பரில் இத்திட்டம். செயற்பட ஆரம்பிக்கும் எனவும் செப்ரெம்பர் முதல் வாரத்தில் நாட்டின் 24 மாவட்டங்களிலும் புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வுகள் இடம் பெறும் எனவும் தெரிவிக்கப் படுகிறது. (உ)

# மட்டு. மாநகரசபை வட-கிழக்கில் முன்னணியில்

(மட்டக்களப்பில்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சகல துறைகளிலும் முதல்தர மாநகர சபையாக மட்டக்களப்பு மாநகரசபை தெரிவு செய்யப் பட்டுள்ளது.

சிறந்த நகரசபையாக வவுனியா நகரசபை உள்ளூராட்சித் திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சிறந்த மக்கள்சேவை, திட்டமிட்டபணிகள், முகாமைத்துவ சேவைகளின் அடிப்படையிலேயே இத்தெரிவுகள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை, வடக்கு-கிழக்கில்உள்ள 61 பிரதேச சபைகளில் சிறந்த சபையாக வவுனியா தெற்குத்தமிழ் பிரதேச சபை மாகாண மட்டத்தில் முதலிடத்திற்கு தெரிவாகியுள்ளது என வவுனியாமாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

இன்று திருகோணமலையில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வுகளில் இச்சபைகளுக்குரிய விருதுகள் வழங்கப்படவுள்ளன. (தி)

## காணிவழங்கஅங்கீகாரம

(கொழும்பு)

உடத்தலவின்ன படு கொலைச் சம்பவத்தல் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு காணிவழங்கப்படவேண்டுமென பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொணடமான் சமர்ப்பித்த யோசனை அடங்கிய சட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதனையடுத்து, பல்லேகலவில் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு சொந்தமான காணியில் இருந்து 10க் காணித்துண்டுகள் வழங்கப்படவுள்ளன. (உ-10)

## இளம்சோடி விசாரிக்கப்பட்டது

காரைநகர் கசூர்னா கடற்கரையில் தகாதமுறையில் நடந்து கொண்டார்கள்எனற சந்தேகத்தில் இளம்சோடி ஒன்று, காரைநகர் கலாசாரத்தை பாதுகாக்கும் குழுவினரால் விசாரிக்கப் பட்டன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காரைநகர் கசூர்னா கடற்கரையில் இடம்பெற்றது.

மேறபடி இளம்சோடியினரை கலாசாரத்தைப் பாதுகாக்கும் குழு இளைஞர்கள் விசாரணை செய்தபோது, சம்பந்தப்பட்ட இளைஞன் கொடிகாமத்தைச் சேர்ந்தவர் என்றும் அண்மையில் ஜெர்மன் நாட்டில் இருந்து விடுமுறையில் வந்ததாகவும் யுவதி வேலணையைச் சேர்ந்தவர் என்றும் தாம் இருவரும் காதலர்கள் என்றும் தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட இருவரையும் எச்சரிக்கைசெய்து விடுவித்தனர். (பி-246)

# திட்ட வரைபில் திருத்தங்கள் கோருகிறார் அமைச்சர் ஹக்கீம்

(கொழும்பு)

அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப் பட்டுள்ள இடைக்கால நிர்வாக



சபைத் திட்டவரைபில் முஸ்லிம் மக்களின அபிலாஷைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இத்திட்டவரைபு குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் திட்டவரைபைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளை அழைத்து அது தொடர்பான விளக்கத்தை அரசாங்கம் அளித்திருந்தது.

எனினும் அதிலுள்ள சில விடயங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதற்கான மாற்று யோசனைகளை அடுத்தகட்டச் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சமர்ப்பிக்கவுள்ளது.

தலைப் புலிகள் இது தொடர்பான கருத்துக்களை முன்வைக்கும் போது, முஸ்லிம் தரப்பினர் தமது கருத்துக்களை தனித்தரப்பாக முன்வைப்பர் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (து)

# மண்ணை மீட்குமாறு மக்கள் கோரிக்கை

(வேலணை)

வேலணை சாட்டி, வெள்ளைக் கடற்கரை மற்றும் செட்டிபுலம், அல்லைப்பிட்டி,மண்கும்பான் போன்ற பகுதிகள கடல்அரிப்பினால் நீரில்மூழ்கும் அபாயம் உள்ளதாக மக்கள் தரப்பில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

மிகக் குறுகிய காலத்தில் இப் பகுதியில் பெருமளவு நிலப்பரப்பு தானித்திருப்பதாக இப்பகுதிமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தநிலை தொடர்ந்தால் இப்பிரதேசங்கள் விரைவில் நீரில் மூழ்கும் சூழ்நிலை உள்ளதென சுட்டிக் காட்டியுள்ள மக்கள், மண்ணை மீட்க சூழலியலாளர்கள் ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வேண்டு கோள்விடுக்குள்ளனர்.

## ஆட்சிக்குழு உறுப்பினர்கள் தெரிவு

(சுண்டுக்குளி)

யாழ.பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஈச்சமோட்டை கிளையின் ஆட்சிக் குழு உறுப்பினர் தெரிவு கடந்த திங்கட்கிழமை சங்கப் பணிமனையில் இடம் பெற்றது.



இதில், தலைவராக கப்டன் டி.எ.எம். குணசிங்கமும், செயலாளராக சச்சி தவநேசனும், உபதலைவராக எஸ் .தர்மபாலனும் நிர்வாக உறுப்பினர்களாக ரி. மகேந்திராஜா, கே. சச்சிதானந்தசீலம், எம்.பிரான்சிஸ், ரி.பி.விஜயசிங்கம் ஆகியோரும்

# அமரர் கே. டானியல் ஞாபகார்த்தமாக வலம்புரி நடத்திய தரம் 10 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி பரிசளிப்பு விழாக் காட்சிகள்











1ம், 2ம் படங்களில் வலம்புரிக் குடும்பத்தைச் சேர்ந்த செல்வி செ. உமாராணி, எஸ். பெருமாள் அவர்களும், 3ம் படத்தில் ஸ்ரீ முருகன் வித்தியாலய அதிபர் சிவசிதம்பரலிங்கம் பேசுவதையும், 4ம், 5ம், 6ம் படங்களில் வலம்புரிக் குடும்பத்தைச் சேர்ந்த ஜி. திருமாலழகன், எம். வாமதேவன், க. லோகநாதன், சு. துரைசிங்கம் ஆகியோர் பரிசில் வழங்குவதையும், அடுத்துவரும் படங்களில் பரிசு பெற்ற மாணவர்களையும், பார்வையாளர்களையும் காணலாம்.

# கிராமங்களில் உருவாகும் புதிய சொற்கள்

புதிய சொற்கள் எப்படி பிறக்கின்றனவென்று ஒரு அன்பர் கேட்டார்.

நான் சொல் ஆராய்ச்சி எதுவும் செய்யவில்லை. அதனால் உங்கள் கேள்விக்கு என்னிடம் பதில் இல்லையென்று சொன்னேன்.

பத்திரிகைகளில் அவ்வப்போது ஆங்கிலச் சொற்களுக்கு தமிழ் சொற்கள் போடுகிறார்களே. அப்படித்தான் புதிய சொற்கள் உருவாகுமோ என்று நான் யோசித்துக் கொண்டிருக்கும் போதே நண்பர் சொன்னார் நிச்சயமாக கிராமங்களில் வாழ்கின்ற மக்கள்தான் புதிய சொற்களை உருவாக்குகிறார்கள் என்று.

எதைவைத்து அப்படிச் சொல்கிறீர் என்று கேட்டேன். அவர் சிரித்துவிட்டுச் சொன்னார், தமக்கு பழக்கமில்லாத ஏதாவது ஒன்று தோன்றினால் அதைக் குறிப்பதற்கு அவர்களே புதிய சொற்களை உருவாக்கி விடுகிறார்கள்.

''**Tank**'' என்று ஒரு கனரக இராணுவ வாகனம் இருக்கிறது அல்லவா? அதை நம்மவர்கள் இந்தியப் படைகள் இங்கே வந்தபோது தான் நேரிடையாகக் கண்டார்கள்.

## அன்றும் இன்றும்

அமைதியை உருவாக்க வந்தவர் ...ள் இந்தப் பயங்கர வாகனத்தை ...ன் ...காண்டுவந்தார்கள்? இந்த ...தி...யெல்லாம் எங்களிடமிருக் ...றது ...கவனமாக இருங்கள் என்று ...ச் ...த்தத்தான்!

...னால் புலிகளுக்கும் அவர்க ...குமிடையில் மோதல் வெடித் ...ும் ஆங்காங்கே இந்த தாங் ...கிகள் கண்ணிவெடிகளால் தகர்க்கப்பட்டனவல்லவா? அதைப்பற்றி கிராமங்களில் மக்கள் பேசிக் கொள்கையில் அந்த வாகனத்திற்கு பெயர் தெரியாததால் 'செயின் புளொக்' என்று குறிப்பிட்டார்கள்.

'செயின்' என்றால் சங்கிலி 'புளொக்' என்றால் ஏதோ ஒரு பெரிய சாமான். எனவே தெரிந்த பொருள்களை வைத்து தெரியாத பொருளுக்கு பெயர் சூட்டி விட்டார்கள்.

இப்பொழுதும் கூட கிராமத்தில் இந்த வாகனத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது 'செயின்புளொக்'

## ஆங்கிலம் வளரும் மர்மம்

என்று தான் குறிப்பிடுகின்றார்கள் என்று முடித்தார் நண்பர்.

இந்த வாகனம் இரண்டாவது உலக யுத்த காலத்தில் சோவியத் படைகளுக்கு பெரும் புகழ் ஈட்டித் தந்தது. ஹிட்லரின் படைகளை நிர்மூலமாக்கிய சோவியத் படைகளுக்கு இந்த வாகனங்கள் தான் (ரஷ்ய தாங்கிப் படை) கைகொடுத்து உதவின.

அது பற்றிய செய்திகளை தமிழ்ப் பத்திரிகைகள் வெளியிட்ட போது 'தாங்கி'கள் என்றுதான் குறிப்பிட்டன. இன்னமும் கூட **Tank** என்பதற்கு நிகரான தமிழ்ச் சொல் வழக்கதிற்கு வரவில்லை. இன்றும் 'தாங்கி' என்று தான் குறிப்பிடப் படுகின்றது.

பத்திரிகைகளில் சில சமயம் சில சொற்கள் பயன்படுத்தப்படும் போது நேரடிக் கருத்துத் தெரியாமல் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் தவிப்பதைக் காணலாம். உதாரணத்திற்கு 'ஹெலிகொப்டர்' என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். இதைச் சிலர் உலங்குவானூர்தி என்று பயன்படுத்துகிறார்கள். லண்டன் தமிழோசையில் இந்தச் சொல்லை முதன் முதல் பயன்படுத்தினார்கள் என்று நினைக்கின்றேன். ஆனால் இதில் 3 சொற்கள் இருக்கின்றன.

உலங்கு-வான்-ஊர்தி என்று அறிவிப்புகளில் பயன்படுத்துவது நன்றாக இருக்கலாம். ஆனால் பத்திரிகைகளில் பயன்படுத்தும் போது சிறிய குறுகிய சொற்களே வசதியாக இருக்கும். குறிப்பாக தலைப்புகள் இடும் போது நீண்ட சொற்கள் சிரமங்களைக் கொடுக்கும்.

### 'தும்பி' விமானம்

ஹெலிகொப்டர் தூரத்தில் இருந்து பார்ப்பதற்கு தும்பி போல் தானே தென்படுகின்றது. அதனால் 'தும்பி விமானம்' என்று கிராமத்தவர்கள் பாணியில் ஒரு சொல்லை உருவாக்கினால் என்னவென்று தோன்றுகின்றது. காலப்போக்கில் 'தும்பி' என்றாலே இரண்டு கருத்துள்ள சொல்லாக அது மாறிவிடவும் வாய்ப்புண்டு.

கிராமத்துப் பையன்கள் 'ஹெலி' வருவதை 'கெலிவருது' என்கிறார்கள். அதையே இந்தப் புதிய சொல் புழக்கத்தில் வந்துவிட்டால் 'தும்பிவருதுடோய்!' என்று அவர்கள் கத்தமாட்டார்களா என்ன!

குண்டுவீச்சு விமானங்கள் வானில் இரையும் போது, நம் மக்கள் 'பம்பர்' வருது என்று கூறிக் கொண்டு பதுங்குகுழிகளை நோக்கி ஓடியகாலமுண்டு.

'**bomb**' என்பதே 'பொம்' எனவும் **bomber** என்பது 'பம்பர்' எனவும் அழைக்கலாயிற்று.

இந்த 'பொம்' என்பது இந்தியாவில் 'பாம்' எனக் கூறப்படும். தலையில் அல்லது உடம்பில் பூசும் தைலத்துக்கும் 'பாம்' என்றுதான் பெயர். இந்த 'பாம்' பற்றி யோகி சுத்தானந்தபாரதியார் ஒரு ருசிகரமான சம்பவத்தைக் கூறியிருக்கிறார்.

### தலையில் போடத்தான்

வடநாட்டில் எங்கோ ஓர் இடத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மகா சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள தமிழ் நாட்டிலிருந்து தீவிர காங்கிரஸ் தலைவர்கள் ரயிலில் போய்க் கொண்டிருந்தார்கள். சுத்தானந்தரும் ஒரு ஆசனத்தில் அமர்ந்திருந்தார். பக்கத்தில் இன்னொரு காங்கிரஸ்வாதி அமர்ந்திருந்து கவிஞருடன் பேசிக்கொண்டு வந்தார். அவர்களுக்குப் பின்னால் இருந்த ஆசனத்தில் அப்போதைய ஆங்கில அரசின் ஒற்றர்கள் பிரயாணிகள் போலிருந்து காங்கிரஸ் தொண்டர்களின் உரையாடல்களை அவதானித்துக் கொண்டு வந்தார்கள். இது கவிஞருக்கும் அவர் நண்பருக்கும் நன்றாகவே தெரியும். அதனால் ஒற்றர்களுக்குக் கேட்கும் படியாகவே உரையாடல் நடந்தது- ஒரு கட்டத்தில்,

நண்பர் கவிஞரிடம் கேட்டார் ''என்ன கவிஞர் பெட்டியெல்லாம் கொண்டு வாறீங்க, அதிலே என்ன வைத்திருக்கீங்க'' என்று. அதற்குக் கவிஞர் ''பெட்டியில் என்னவா? பாம் வைச்சிருக்கேன்'' என்றார்.

அதற்கு நண்பர் ''பாமா, ஐயோ எதற்கு'' என்று பயந்தவர் போல் கேட்டார். கவிஞர் ''வேற என்னத்துக்கு அங்கே போனதும் தலையிலே போடறதுக்குத் தான்'' என்றார்.

அடுத்த ஸ்டேஷனில் ரயில் நிறுத்தப்பட்டது. காவியுடையில் இருந்த கவிஞர் கைது செய்யப்பட்டு பெட்டியுடன் பொலிஸ் ஸ்டேஷன் கொண்டு போகப்பட்டார்.

''இவரை ஏன் கொண்டு வந்தீர்கள்'' என்று பொலிஸ் பொறுப்பதிகாரி கேட்டார்.

''சார் இவர் பெட்டியில் பாம் வைத்திருக்கிறார்- காங்கிரஸ் மகாநாட்டில் போய் தலையில் போடவிருக்கிறார்'' என்றார் சி.ஐ.டி.

''உமக்கு எப்படித் தெரியும்'' என்று கேட்டார் அதிகாரி.

''இவரே ரயிலில் வைத்து இன்னொருவரிடம் கூறிக்கொண்டு வந்ததை நானே காதால் கேட்டேன்'' என்றார் இரகசியப்பொலிஸ். கவிஞர் நமிட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டு பேசாமல் இருந்தார். அதற்குள் அக்கம் பக்கத்தில் கதை பரவவே பொலிஸ் நிலையத்தில் சனம் கூடிவிட்டது.

''சாமியார் பெட்டியைத் திறவுங்க'' என்றார் அதிகாரி.

''நீங்களே திறந்து பாருங்க'' என்றார் சாமியார் வேஷத்தில் இருந்த கவிஞர்.

கான்ஸ்டபிள் கவிஞரின் பெட்டியைத் திறந்தார். அதில் பாம் இருந்தது. அது தலையில் தடவுகிற பாம். சி.ஐ.டி. முகத்தில் அசடு வழிந்தது. கவிஞருக்கு சிரிப்பு உள்ளுக்குள். இன்ஸ்பெக்டர் கவிஞரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். இரகசியப் பொலிஸ்காரர் மேலதிகாரியிடம் நன்றாகவே வாங்கிக் கட்டியிருப்பார்.

### யாழ்.நகரில் கவியோகி

கவியோகி சுத்தானந்தபாரதியார் பலதடவைகள் யாழ்ப்பாணம் வந்திருக்கிறார். ஒருமுறை அவர் வந்திருந்த சமயம் சாதிப்பிரச்சினைக்கு எதிரான இயக்கம் வலுப்பெற்றிருந்தது. மேலும் ஆலயப் பிரவேசமும் சூடு பிடித்திருந்தது. ஆலயப் பிரவேசத்தை ஆதரித்தும், சாதிக் கொடுமைகளை எதிர்த்தும் இயக்கங்கள் நடைபெற்றன.

சாதியின் பெயரால் அமைக்கப்பட்டிருந்த ஒரு அமைப்பின் கூட்டமொன்றில் கலந்துகொள்ள அவர் அழைக்கப்பட்டிருந்தார். அந்தக் கூட்டத்தில் கவிஞருக்கு முன்னதாகப் பேசிய ஒரு பிரமுகர் சாதி முறையை ஒழிப்பது கஷ்டம் என்றும், தேவையின் அவசியம் கருதியே முன்னோர்கள் சாதியை அமைத்தார்கள் என்றும், ஒவ்வொரு புஷ்பத்திற்கும் ஒரு மணம் இருப்பது போல் ஒவ்வொரு சாதிக்கும் ஒரு குணம் உண்டு என்றும் வெளுத்துவாங்கினார். அதற்குப் பின்னர் பேசிய சுத்தானந்த பாரதியார் ''சாதியென்பது இடைக் காலத்தில் வந்தது. வேதகாலத்தில் சாதியென்பது இருந்ததில்லை. சமூகத்தில் இருந்த அதிகார வர்க்கத்தினரே சுயநலத்திற்காக சாதி முறையைக் கொண்டுவந்தார்கள் என்று விளக்கங்கள் கொடுத்துப் பேசலானார்.

பகிடி என்னவென்றால் முன்னர் பேசியவர் கவிஞருக்கு வேண்டியவர். கவிஞர் வருகைக்கு அவரும் பல வகையில் உதவி புரிந்திருந்தார். புதிய சொற்கள் பற்றி ஆரம்பித்து வேறு எங்கோ போய் விட்டேன் அல்லவா?

கிராமங்களில் புதிய சொற்கள் உருவாவது ஒருபுறமிருக்க படித்தவர்கள் மத்தியில் இருந்து மறைந்துவிடுகிற சொற்கள் கிராமங்களில் தான் நிரந்தரமாகப் பாவனையில் இருக்கும் என்பது பழைய மரபு.

கம்பர் பெருமான் சோழன் அவையில் இராமாயணத்தை அரங்கேற்றிய போது, 'துமி' என்ற சொல் ஓரிடத்தில் பயன்படுத்தப் பட்டிருப்பதைக் கண்டு ஒட்டக் கூத்தர் வெகுண்டு, வழக்கில் இல்லாத ஒரு சொல் எங்ஙனம் இலக்கியத்தில் இடம்பெறலாம் என்று பிரச்சினை கிளப்பினாராம்.

'துமி' என்பது வழக்கத்தில் உள்ள சொல்தான் என்று கூறி அதனை நிரூபிப்பதாகக் கம்பர் கூறினாராம். கம்பர் கேட்டுக் கொண்டதன் பேரில் அரசனும் ஒட்டக்கூத்தர் முதலாம் புலவர்களும் அவருடன் இடையர்கள் வாழும் ஒரு சேரிக்குச் சென்றார்களாம். இடையர் பெண்கள் பெரிய கிடாரம் போன்ற பாத்திரங்களில் தயிர் கடைந்துகொண்டிருந்தார்கள். அங்கு விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களைப் பார்த்து ஒரு பெண் கூறினாள் ''தூரப்போய் விளையாடுங்க, தயிர் கடையும் போது பறக்கும் 'துமி' பட்டால் தடிமன் பிடிச்சிடும்'' என்று.

இதைக் கேட்டபின்தான் 'துமி' என்ற சொல் வழக்கில் உள்ளது என்பதைச் சோழனின் அரசவைப் புலவர்கள் ஒப்புக்கொண்டார்களாம்.

இராமாயண சொற்பொழிவொன்றில் கேட்ட விபரம் இது.

கம்பராமாயணத்தில் இலங்கைக்கு செல்வதற்காக இராமர் அணை கட்டிய போது வானரங்கள் மலைகளையும் கற்பாறைகளையும் கொண்டுவந்து போட்டதால் எழுந்த துமிப்படலம் வானுலகு வரை சென்றதாக வரும் பாடல் தொடர் பாகத்தான் இந்தப் பிரச்சினை எழுந்ததாகக் கூறுவார்கள்.

'துமி' என்ற சொல் இங்கே இப்பொழுதும் வழக்கில் உள்ள சொல்தானே!

### ஆங்கில எழுத்துக்களில் மாற்றம்

ஐரோப்பிய யூனியன் நாடுகளில் ஆங்கில மொழியையே அலுவலக மொழியாக ஏற்றுக்கொள்ள முடிவு செய்திருப்பதாக அண்மையில் செய்தி வெளிவந்திருந்தது.

ஐரோப்பிய நாடுகளில் இம்மொழியை இலகுவாகப் பயன்படுத்தும் பொருட்டு ஆங்கிலச் சொற்களை எழுதும் போது அவைகளின் ஓசைக்கேற்ப எழுத்துக்களை மாற்றிக் கொள்வதற்கும் ஐந்து ஆண்டுத் திட்டமொன்றை ஐரோப்பிய ஆணையம் வகுத்துள்ளது.

இந்தத் திட்டத்தின்படி 'வ' ஓசைக்குரிய **W,V** ஆகிய எழுத்துக்களில் **W** எழுத்தைக் கைவிட முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி **W** எங்கு வருகிறதோ அங்கெல்லாம் **V** பயன்படுத்தப்படும்.

## 'தூமி'யும் தும்பியும்

''**ph**'' என்ற இரு எழுத்துக்கள் வரும் இடங்களில் அவைக்குப் பதிலாக '**F**' பயன்படுத்தப்படும். '**Th**' எழுத்துக்கள் வரும் இடங்களில் '**Z**' பயன்படுத்தப்படும். இதேபோல் இரட்டை எழுத்துக்கள் வரும் இடங்களில் ஒரு எழுத்து கைவிடப்படும். சொற்களின் இறுதியில் ஓசை எழுப்பாத **E** எழுத்து கைவிடப்படும். இன்னும் '**OU**' ஆகிய இரு எழுத்துக்கள் வரும் இடங்களில் '**O**' கைவிடப்படும்.

இதன்படி பார்த்தால் ஆங்கில மொழியின் எழுத்து வடிவம் காலப் போக்கில் புது மாதிரியாகிவிடும். சொற்கள் அவைகளின் ஓசைக்கேற்பவே எழுதப்படும்.

ஏற்கனவே அமெரிக்காவில் இவ்வாறான மாற்றங்கள் பல நடைமுறைக்கு வந்துள்ளன. அவை ஏனைய நாடுகளிலும் பரவி வருகின்றன.

முன்பு **Colour** என்று எழுதியதை இப்பொழுது **COLOR** என்று எழுதுகிறார்கள். இவ்வாறு பல உதாரணங்கள் உண்டு.

முன்னொரு காலத்தில் இங்கிலாந்தில் இம்மாதிரியான சீர்திருத்தங்களைக் கொண்டுவர சில அறிஞர்கள் முயன்ற போது அப்போதிருந்த பிரித்தானிய மகாராணி அதற்கு அங்கீகாரம் அளிக்க மறுத்து விட்டராம்.

ஆங்கில மொழியை **Queen's Language** அரசியாரின் மொழி என்று தான் ஆங்கிலேயர் கூறி பெருமைப்பட்டுக் கொள்ளவார்கள்.

ஆங்கில மொழி ஆங்கிலேயர்களை விட அதாவது ஆங்கிலம் பேசும் பிரிட்டிஷ் பிரஜைகளை விட ஏனைய நாடுகளில் உள்ளவர்களில் அனேகர் ஆங்கிலம் பேசுகிறார்கள். பிரிட்டனை விட வேறு பல நாடுகளில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்கின்றது.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் ஆங்கிலம் ஆட்சி மொழி. இந்தியாவில் ஆங்கிலம் இணைப்புமொழி. ஆபிரிக்க, ஸ்கன்டிநேவியன் நாடுகள் பலவற்றிலும் ஆங்கிலம் பேசப்படுகின்றது.

வெள்ளைக்காரன் 26 எழுத்துக்களை வைத்துக்கொண்டு ஆங்கிலத்தை உலக மொழியாக்கி வருகின்றான். அதனோடு போட்டி போட்டுக்கொண்டிருந்த பிரெஞ்சு. ஜெர்மன், ரஷ்ய மொழிகள் பின் வாங்கிவிட்டன. ஒரு காலத்தில் தேம்ஸ் நதிக்கரையில் குடியேறி வாழ்ந்து வந்த மக்களால் பேசப்பட்டதாகக் கருதப்படும் ஆங்கிலம் இன்று உலகம் முழுவதும் பரவி ஆங்கிலம் தெரியாதவரே இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

ஆங்கிலத்திற்கு முன்னரே பல நாகரிகங்களை படைத்த மக்களின் மொழியில் பல இன்று வழக்கொழிந்து போயுள்ளன. கிரேக்கம், லத்தீன் மற்றும் பாளி, சமஸ் கிருதம் போன்ற மொழிகள் இன்று வழக்கொழிந்து போய்விட்டன. ஆனால் இந்த மொழிகளில் இணை மொழிகளாக அல்லது இந்த மொழிகளைப் பெரிதாகப் பயன்படுத்திக்கொண்ட மொழிகள் இன்று வளர்ச்சியடைந்த மொழிகளாகவிருக்கின்றன.

எதுவானாலும் ஆங்கில மொழியின் வளர்ச்சிக்கும் அது இன்றைய நிலையை அடைந்தமைக்குமான காரணிகளையும் முறையாக ஆராய்ந்து அவைகளை கூடிய வரை பயன்படுத்த முனைவது தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் உதவுமல்லவா?

அன்பன்

---

## தரம் 11 மாணவர்களுக்கான

# கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டிப் பரிசில்கள்.

1ஆம் பரிசு ரூபா 750/=
2ஆம் பரிசு ரூபா 500/=
3ஆம் பரிசு ரூபா 250/=

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஈழத்து எழுத்தாளர்

**அமரர் கணபதி கணேசன்** ஞாபகார்த்தமாக

(செம்பருத்தி பப்ளிகேஷன்ஸ் மலேசியா)

கட்டுரையின் தலைப்பு

**கல்வித்துறையில் கணனியின் பங்கு**

போட்டியின் விதிகள்:

தரம் பதினொன்றில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

* கட்டுரை 200தொடக்கம் 250சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப்பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 25.07.2003ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15,வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

**இணைக்கும் பத்திரம்**

**கட்டுரைப்போட்டி இல-6**

மாணவர் பெயர்: ..........................................

பாடசாலை முகவரி: ..........................................

..........................................

கற்கும் தரம்: ..........................................

உறுதிப்படுத்துகிறேன்

..........................................

ஆசிரியர்.

# ஈராக்கில் சட்டம், ஒழுங்கைப் பேணுவதற்கு ஐ.நா.வின் படையைக் கோருகிறது அமெரிக்கா

(வாஷிங்டன்)

போருக்குப் பின்னான ஈராக்கில் சட்டம் ஒழுங்குகளைப் பேண அந்நாட்டிற்கு தமது படைகளை அனுப்ப இந்தியா, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகள் மறுப்புத் தெரிவித்ததையடுத்து ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிகாக்கும் படையின் உதவியை அமெரிக்கா கோரியுள்ளது.

ஈராக் மீது அமெரிக்கக் கூட்டுப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து அங்கு நிர்வாகப் பணிகளை அமெரிக்கா பொறுப்பேற்றுள்ளதுடன், அமெரிக்க இராணுவத்தினரை பாதுகாப்புப் பணிகளிலும் ஈடுபடுத்தியுள்ளது.

இவர்கள் மீது சதாமின் ஆதரவாளர்கள் தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்திவருகின்றார்கள். இதனால் பல அமெரிக்கப் படைகள் பலியாகின்றனர்.

அதேசமயம் ஈராக்கில் இராணுவத்தினரை வைத்து பாதுகாப்புக் கடமைளை மேற்கொள்ள ஒரு மாத காலத்திற்கு மட்டும் 20 ஆயிரம் கோடி ரூபா செலவாகின்றது என்று தெரிவித்த அமெரிக்கா,

ஈராக்கில் சட்டம் ஒழுங்குகளைப் பேணிக் காக்க இராணுவத்தினரை அனுப்பி உதவுமாறு இந்தியாவிடம் கேட்டிருந்தது.

இதற்கு ஐ.நா. சபையின் மேற்பார்வையில்தான் தமது இராணுவத்தினரை அங்கு அனுப்ப முடியும் என்று கூறி இந்தியா மறுப்புத் தெரிவித்துவிட்டது.

அமெரிக்காவின் எதிர்பார்ப்பிற்கு இந்தியாவின் இந்த முடிவு முட்டுக்கட்டையிட்டுவிட்டது என்று அமெரிக்க நியுயோர்க் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இதனையடுத்து தனது செயற்திட்டத்தை மாற்றியமைக்க முடிவு செய்ய அமெரிக்கா பல்வேறு நாடுகளடங்கிய ஐ.நா.வின் அமைதிப் படையினரை ஈராக்கிற்கு அனுப்புமாறு ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானத்தைக் கொண்டுவர அமெரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான முழு முயற்சியில் அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலீசா ரைஸும் வெளியுறவுத் துறை அமைச்சர் கொலின் பவலும் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் ஈராக்கில் வேற்றுநாட்டவர்களின் ஆக்கிரமிப்பு படைகள் விரைவில் வெளியேற வேண்டும். அந்நாட்டு மக்களால் விரைவில் இடைக்கால அரசு ஒன்றை ஏற்படுத்தி அவர்கள் கையில் அதிகாரத்தை வழங்க வேண்டுமென்று ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலர் கோபி அனான் நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகள் சபையில் அறிக்கையொன்றை சமர்ப்பித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும். (பி-2)

# மொராக்கோவுடன் நல்லுறவை பேண நாம் தயாராகவுள்ளோம்

## அல்ஜீரிய அதிபர் அப்துல் அஸீஸ்

(அல்ஜியர்ஸ்)

மொராக்கோவுடன் மீண்டும் நல்லுறவுகளை ஏற்படுத்துவதற்கு தாம் விரும்புவதாக அல்ஜீரிய ஜனாதிபதி அப்துல் அஸீஸ் கூறியுள்ளார்.

1975ஆம் ஆண்டுமுதல் இரண்டு நாடுகளுக்குமிடையில் இருந்து வரும் முறுகல் நிலையை தீர்க்கும் முகமாகவே தாம் இத்தீர்மானத்திற்கு வந்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பிற்கு நேற்று முன்தினம் இரவு வழங்கிய விருந்துபசாரத்தின்போதே அல்ஜீரிய ஜனாதிபதி இதனைத் தெரிவித்திருந்தார்.

தம்மிடையேயான முறுகல் நிலை காரணமாக 1994ஆம் ஆண்டு முதல் இரு நாட்டினதும் எல்லைப் பிரதேசங்கள் மூடப்பட்ட நிலையிலேயே உள்ளதாகவும் அதனை மீண்டும் திறக்க தாம் விரும்புவதாகவும் அவர் இந்த விருந்துபசாரத்தின்போது குறிப்பிட்டிருந்தார். (பி-2)

# பலஸ்தீனப் பிரதமர் அமெரிக்கா செல்ல தீவிரவாத அமைப்புக்கள் எதிர்ப்பு

(ஜெருசலேம்)

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் ரமல்லாவில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் பலஸ்தீனப் பிரதமர் மஹ்மூத் அப்பாஸ் அமெரிக்காவுக்குச் செல்லக்கூடாது என்று ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் தீவிரவாத இயக்கத்தினர் கூறியுள்ளனர்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையே அமைதியை ஏற்படுத்த அமெரிக்கா முயற்சி எடுத்து வருகிறது. இதற்காக அமெரிக்க அதிபருடன் பேச மஹ்மூத் அப்பாஸ் இம்மாதம் 25ஆம் திகதி அமெரிக்கா செல்லவுள்ளார்.

இந்நிலையிலேயே மேற்குறித்த தீவிரவாத இயக்கத்தினர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளனர்.

யஸீர் அரபாத் வீட்டுக் காவலில் இருந்து விடுவிக்கப்படும் வரையில் வெளிநாடுகளுக்குச் செல்ல மாட்டேன் என்று கூறிவந்த அப்பாஸ் தற்போது அமெரிக்கா செல்ல முடிவு செய்திருக்கின்றார் என்று சுட்டிக்காட்டியுள்ள ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிகாத் தீவிரவாத இயக்கத்தினர்,

அமெரிக்காவின் வற்புறுத்தலுக்கு அப்பாஸ் அடிபணியக் கூடாது என்றும் பலஸ்தீனர்கள் ஆயுதங்களைக் கைவிடக்கூடாது என்றும் கூறியுள்ளனர்.

இதேவேளை அரபாத்தின் ஒப்புதலுடனேயே அப்பாஸ் அமெரிக்கா செல்கிறார் என்பதும் இம்மாதம் 29ஆம் திகதி இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோனும் அமெரிக்கா செல்லவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (பி-2)

# பிரான்ஸ் சுங்கவரி அலுவலகத்தில் தொடர் குண்டுவெடிப்புக்கள்


(பாரிஸ்)

பிரான்ஸின் நைஸ் நகரத்திலுள்ள சுங்கவரி அலுவலகத்தில் அடுத்தடுத்து இரண்டு குண்டுவெடிப் புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதில் 11 பேர் படுகாயமடைந்துள்ளதுடன், கட்டடங்கள் பல சேதம டைந்துள்ளதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

இச்சம்பவத்திற்கு இதுவரை எந்தவொரு அமைப்பும் உரிமை கோரவில்லை எனவும் பொலிஸார் கூறுகின்றனர்.

இதேவேளை, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இதே கட்டடத்தின் மீது தீவிரவாத குழு தாக்குதல் நடத்த முயன்ற சமயம் முன் கிடைத்த தகவலைக் கொண்டு பிரான்ஸ் பாதுகாப்புப் பிரிவினர் முறியடித்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (பி-2)



ஈரானைச் சேர்ந்த தலை ஒட்டிப் பிறந்த இரட்டையர்களின் அறுவைச் சிகிச்சை தோல்வியடைந்து அவர்கள் மரணமடைந்தனர். தற்போது பாகிஸ்தானைச் சேர்ந்த சல்மா பீபி என்பவர் இருதயமும் கல்லீரலும் ஒட்டியபடி இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார். இவர்களுக்கு உடனடியாக சத்திர சிகிச்சை செய்யாவிட்டால் உயிர்பிழைப்பது கடினம் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஈராக்கியர்க்கு பயிற்சியும் ஆயுதங்களும் வழங்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது

(வாஷிங்டன்)

ஆயிரக்கணக்கான ஈராக்கியர்களுக்குப் பயிற்சிகளையும் ஆயுதங்களையும் வழங்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

ஈராக்கிலுள்ள அமெரிக்கா தலைமையிலான துருப்புக்களுக்கு உதவிகளை வழங்கும் நோக்கிலேயே ஈராக்கியர்கள் பயிற்றுவிக்கப்படவுள்ளார்கள் என்று அமெரிக்க இராணுவத்தினரின் புதிய தளபதி ஜெனரல் ஜோன் அபிஷைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஈராக்கில் தற்போது நிலைகொண்டுள்ள சுமார் ஒரு லட்சத்து 48 ஆயிரம் அமெரிக்க இராணுவத்தினர் குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு அங்கு கடமையில் இருப்பார்கள் என்றும், அதன் பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து யோசனைகள் செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேசமயம் ஈராக்கியர்களுக்கு போதியளவு பயிற்சி வழங்கப்பட்ட பின்னர் அந்நாட்டின் பாதுகாப்புக் கடமைகளை அவர்களிடம் ஒப்படைக்கும் திட்டமொன்றும் தம்மிடம் இருப்பதாக அபிஷைத் தெரிவித்துள்ளார். (பி-2)

# அரச ஊழியர்களின் நலனுக்காக ஏனைய மக்களை ஏமாற்ற முடியாது

## முதலமைச்சர் ஜெயலலிதா

தமிழ் நாட்டில் மொத்த மக்கள் தொகையில் 2சதவீதத்தினரே அரச ஊழியர்களாக இருக்கின்றார்கள் என்றும் இவர்களின் நலனுக்காக 98சதவீத மக்களை தான் ஏமாற்ற முடியாது என்றும் கூறுகிறார் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா

நேற்று முன்தினம் நாமக்கல்லில் இடம்பெற்ற விழாவொன்றில் பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கியும் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகளை தொடக்கியும் அவர் உரையாற்றினார். அப்போது உரிமைகளுக்காக போராடும் அரச ஊழியர்களும் ஆசிரியர்களும் தங்கள கடமைகளையும்சரிவர ஆற்ற வேண்டும என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை தமிழ்நாடு அரசு பணிநீக்கம் செய்திருக்கும் ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்பாக இன்னும் ஓரிரு நாட்களில் முதலமைச்சர் நல்ல முடிவினை எடுப்பார் என்று தமிழ்நாடு அரச அலுவலர் ஒன்றியத்தின் தலைவர் சூரியமூர்த்தி கூறுகின்றார்.

சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளரிடம் அவர் பேசியபோது முதலமைச்சரைச் சந்திக்கும் வாய்ப்பு தலைமைச் செயலர் தங்களுக்கு இன்னமும் ஏற்படுத்தித்தரவில்லை என்ற தகவலையும் வெளியிட்டிருந்தார். (பி-9)



விஸ்வஹிந்துப் பரிஷத்தின் சர்வதேச செயலாளர் பிரவீன் றொகாடியா அண்மையில் சென்னை வந்திருந்தார். அங்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா சிறந்த பிரதமராக விளங்குவார் என சென்னையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

WORLD NEWS உலக தரிசனம்

# கட்சிகளுக்கிடையில் கருத்தொற்றுமை ஏற்படும் அறிகுறி

(புதுடில்லி)

நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் சட்டப் பிரேரணை குறித்து இந்திய அரசியல் கட்சிகளுக்கிடையில் கருத்தொற்றுமை ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மக்கள் சபை சபாநாயகர் மனோகர் யோஷி தலைமையில் இது தொடர்பான அனைத்துக் கட்சிக் கூட்டம் சில தினங்களுக்கு முன் இடம்பெற்றுள்ளது.

பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் இந்தச் சட்டப் பிரேரணை பல தடவைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் சில எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பால் நிறைவேற்றப்படவில்லை. எனினும் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் இது தொடர்பாக முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் மழைக்காலக் கூட்டத் தொடரில் இந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் எனவும் கருதப்படுகின்றது. (பி-9)

# லைபீரியாவில் இருதரப்பு மோதல்கள்தொடர்கின்றன

(மன்ரோவியா)

லைபீரியாவில் அரச துருப்பினருக்கும் லைபீரியத் தீவிரவாதிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் மீண்டும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இதன்போது பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

தலைநகர் மன்ரோவியாவை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் பொருட்டு லைபீரியத் தீவிரவாதிகள் இத்தாக்குதல்களை நேற்று முன்தினம் அதிகாலை ஆரம்பித்ததுடன், அப்பகுதியை சுற்றிவளைத்துள்ளனர் என்றும் தெரியவருகின்றது.

இந்நடவடிக்கையினை அடுத்து எதிர்த்தாக்குதல்களை அரச துருப்பினர்கள் நடத்தியுள்ளனர்.

இதேவேளை லைபீரியத் தலைநகர் மன்ரோவியாவை விட்டுத் தாம் ஒரு போதும் வெளியேறப் போவதில்லை என்றும்,

சர்வதேச அமைதி காக்கும் படையினர் தமது நாட்டில் அமைதியை ஏற்படுத்திக் கொள்ளும் வரை தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளப் போவதில்லை எனவும் அந்நாட்டு ஜனாதிபதி சார்ள்ஸ் ரெய்லர் கூறியுள்ளார். (பி-2)

# நவாஸ் ஷெரீப்பின் சகோதரர் தேடப்பட்டுவரும் குற்றவாளி

## பாக். தீவிரவாத ஒழிப்பு நீதிமன்றம் அறிவிப்பு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் சகோதரர் ஷாபாஸ் ஷெரீப் தேடப்பட்டுவரும் குற்றவாளி என்று அந்நாட்டில் உள்ள தீவிரவாத ஒழிப்பு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானின் முஸ்லிம் லீக் தலைவரான நவாஸ் ஷெரீப் பஞ்சாப் மாகாண முதல்வராக இருந்து வந்தார். அப்போது 1999ஆம் ஆண்டு 5 இளைஞர்களைக் கொல்லப் பொலிஸாருக்கு உத்தரவிட்டதாக அவர்மீது அந்நாட்டு நீதிமன்றத்தினால் குற்றஞ்சாட்டப்பட்டது.

இவருடன் முன்னாள் பொலிஸ் அதிகாரியான பாபர் அஷ்ரப் இவ்வழக்கில் சம்பந்தப்பட்டிருந்தார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது. இக்குற்றச்சாட்டு வெளியானதையடுத்து இவர்கள் தலைமறைவாகி இருந்தனர்.

தற்போது இவர்கள் இருவருக்கும் தீவிரவாத அமைப்புக்களுடன் தொடர்புகள் இருந்துவருவதாக அண்மையில் கிடைத்துள்ள தகவல்களையடுத்தே பாகிஸ்தானில் இயங்கிவரும் தீவிரவாத ஒழிப்பு நீதிமன்றம் இந்த அறிவிப்பினை விடுத்துள்ளது. (பி-2)

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது.
– குறள்

வலம்புரி

## போசாக்குத் திட்டம் தேவை

வடபகுதியில் பெருமளவு சிறுவர்கள் போசாக்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற தரவுகள் சுகாதார அமைப்புக்களினால் கண்டறியப் பட்டுள்ளது. யுத்த சூழ்நிலையினால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள், அகதி முகாம் வாழ்க்கை, வறுமை போன்ற பல்வேறு காரணங்களினால் போசாக்கின்மையின் அதிகரிப்பு மோசமடையலாயிற்று. சிறுவர்கள் மத்தியில் காணப்படும் மந்தபோசனை தொற்று நோய்களுக்கு வழிவகுப்பதுடன் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் வளர்ச்சியும் தடைப்பட ஏதுவாகிறது. இதனால் எதிர்காலத்தில் நலிவுற்ற-பிறரில் தங்கிவாழுகின்ற ஓர் இளம் சந்ததி உருவாகும் ஆபத்து உண்டென்பது மறுக்க முடியாத உண்மை.

சுகநல அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஒரு மனிதனின் மூளை வளர்ச்சி சிறுபராயத்திலேயே ஏற்படுகிறது. அதாவது மூன்று வயதிற்குள் எண்பது வீதமான மூளை வளர்ச்சியும் ஐந்து வயதிற்குள் முழுமை யான வளர்ச்சியும் ஏற்பட்டு விடுகிறது. இக்காலத்தில் ஒரு குழந்தை போசாக்கினால் பாதிக்கப்பட்டு இருக்குமாயின் அக்குழந்தையின் மூளைவளர்ச்சியும் பாதிக்கப்படுவது உறுதி. அவ்வாறு பாதிக்கப்பட்ட குழந்தையால் எதிர்காலத்தில் கல்வியிலோ அன்றி புறச்செயற்பாடுகளிலோ ஆர்வத்துடன் ஈடுபட முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். எனவே சிறுபராயத்தில் பிள்ளைகளின் போசாக்கு விடயத்தில் கவனம் செலுத்துவது ஆரோக்கியமான எதிர்கால சந்ததியை உருவாக்குவதற்கான ஏற்பாடாகும்.

இது விடயத்தில் பெற்றோர்களின் பங்கு நிறையவே தேவை

# உலகவங்கி கண்மூடித்தனமாக இலங்கைக்கு நிதிஒதுக்கீடு செய்கிறது

## பொ.ஐ.முன்னணி கண்டனக் குரல்

(கொழும்பு)

இலங்கையின் எயிட்ஸ்தடுப்பு நடவடிக்கைகளுக்கென ஒருகோடி டொலர்களை உலகவங்கி கடனாக ஒதுக்கியிருப்பது அவசியமற்ற ஒரு செயலாகும். இது தனது ஆலோசகர்களுக்கு உதவுவதற்காக எடுககப்படும் ஒரு நடவடிக்கையென்று தாம் நம்புவதாகவும் பொதுஜன ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

அபிவிருத்திச் செயல்திட்டம் ஒன்றிற்காகவன்றி, உலகவங்கியின் ஆலோசகர்களுக்கு வழங்கப்படுவதற்காகவே இப் பண உதவி கண்மூடித்தனமாக வழங்கப்படுகிறது என்றும் குற்றம் சாட்டியுள்ளது.

சமாதான நடவடிக்கைகளில் பின்னடைவு ஏற்பட்டிருக்கும் நிலையிலும், உலகவங்கி ஏற்கனவே உறுதியளிக்கப்பட்ட தொகையிலும் அதிகமாக 200 மில்லியன் டொலர்களை அறிவித்து, இரண்டு நாட்கள் இடைவெளியில் பொ.ஐ.மு வின் இக்கருத்து வெளியிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆயிரம் மில்லியன் டொலர்களை நான்கு வருடங்களில் பெற்றுக்கொள்ள முடியுமென்றும், அரசாங்கம் பொருளாதாரத்தை கையாளும் விதம் தமக்கு திருப்தியளித்துள்ளதாகவும் உலகவங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பீற்றர் ஹரோல்ட் தெரிவித்ததை சுட்டிக்காடடியுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி, ஹரோல்ட் கேலிப்பேச்சில் ஈடுபட்டிருக்கிறாரா எனவும் வினவியுள்ளது.

பிரதான எதிர்க்கட்சி எமது கட்சிதான். அரசாங்கம் பொருளாதாரத்தையும், சமாதான நடவடிக்கைகளையும் கையாளும் விதம் பற்றி நாம் பெரிதும் அதிருப்தி அடைந்திருக்கிறோம். உலவங்கி, அமைச்சர்கள் ஊழல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பதுபற்றி கவலையடையாது, அவர்களுக்கு ஆதரவான அறிக்கைகளையே வெளியிட்டுவருகிறது.

ஏப்ரலில்இருந்து சமாதானப் பேச்சுககள் தடைப்பட்டிருக்கும் நிலையிலேயே அரசின்மீது பெரும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்றும் பொ.ஐ.மு.மேலும் தெரிவித்துள்ளது. (உ)

# உறவுகள்குறித்து உரிய பதில் தருக!

## காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் பாராளுமன்றம் முன்பாக உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமல்போனோர் பாதுகாவலர் சங்கம், பாராளுமன்றம் முன்பாக உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை விரைவில் நடத்தவுள்ளது.

நேற்றையதினம் யாழ்.முனீஸ்வரன் ஆலயமுன்றலில் நடைபெற்ற சங்கத்தின் கலந்துரையாடலில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

தமது நிலைப்பாடுகுறித்து விளக்கமளித்த சங்கத்தின் செயலாளர் எஸ்.சற்குணம்,

கடந்த 1996-1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனவர்கள் தொடர்பில் உரிய பதிலை தரக்கோரி பல்வேறுதரப்புக்களுடனும் பேசியாயிற்று பலனில்லை.

பலதடைவைகள் மறியல் போராட்டங்களை நடத்திய போதிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இந்தநிலையில் அண்மையில் கூட, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோனை பிரதமரின் அலுவலகத்தில் வைத்து எமது பிரதிநிதிகள் சந்தித்துப் பேசியிருந்தனர். இதற்கு சாதகமானபதில் கிடைக்கவில்லை.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதனும் இவை தொடாபில் தன்னால் நடவடிக்கைகளை எடுக்கமுடியாதிருப்பதாக கையை விரித்துவிட்டார்.

இந்த நிலையிலேயே செயலகம் முன்பாக மறியல்போராட்டம் நடத்துவதென்ற எமதுமுடிவை மாற்றி, பாராளுமன்றம் முன்பாக உண்ணாவிரதம் இருக்கமுடிவு செய்துள்ளோம்.

இந்தப்போராட்டம் இடம் பெறும் திகதி ஓரிரு வாரத்தினுள் தீர்மானிக்கப்படும்.இதுவிடயத்தில் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது பங்களிப்பை செலுத்த வேண்டுமென்று குறிப்பிட்டார்.

இதேவேளை, காணாமல் போனவர்கள் தொடர்பில் ஜனாதிபதியைச் சந்தித்து பேசுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார். (உ-4)

# புலிகளின் தீவிரப் போக்கை பிரதமரால் மாற்ற முடிந்துள்ளது

(பொலநறுவை)

விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைமைப் பீடத்தின் தீவிரப் போக்கை பிரதமர் ரணில்விக்கிரம சிங்கவினால் மாற்றியமைக்க முடிந்துள்ளதாக வடிகாலமைப்பு நீர் முகாமைத்துவ அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

யுத்தம் நிறுத்தப்பட்டதனால், ஆயுதப் படையினரும் பொது மக்களும் எந்தவித அச்சமும், உயிரிழப்புக்களும் இன்றி வாழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சி பற்றி சாதாரண மக்களுககுத் தெளிபடுத்தவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது.

பொலநறுவை மாவட்டத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டங்களில் அமைச்சர்களான லக்ஷ்மன் செனவிரட்ண, பந்துல குணவர்த்தன, எஸ்.பி.திஸநாயக்க ஆகியோருடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டுள்ளார். (பி)

# அதிபரின் வீட்டுக்கு கைக்குண்டு வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஓட்டமாவடி முஸ்லிம் தேசியப் பாடசாலை அதிபரின்

வில்லை என விசாரணைகளை மேற்கொண்ட வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குவதற்கான ஏற்பாடாகும்.

இது விடயத்தில் பெற்றோர்களின் பங்கு நிறையவே தேவையாயினும் பிள்ளைகளின் போசாக்குப் பற்றியோ அல்லது போசாக்கின்மையால் ஏற்படக்கூடிய பாதிப்பு பற்றியோ பெற்றோர்கள் எந்தளவு தூரம் அறிந்துள்ளார்கள் என்ற கேள்விக்குப் பதில் தேடுவது கடினமே.

எனவே சிறுவர்கள் மத்தியில் அதுவும் குறிப்பாக பள்ளி முன்னிலைப்பிள்ளைகள் மத்தியில் காணப்படும் மந்த போசனையை நிவர்த்தி செய்ய முன்பள்ளிகள் தோறும் போசாக்குதிட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். இத்தகைய போசாக்கு திட்டங்களை உருவாக்குவதில் அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது காத்திரமான பங்களிப்பை வழங்க முன்வர வேண்டும்.

அதேவேளை சிறுவர்களின் போசாக்குப் பற்றிய விழிப்புணர்வை சமுக மட்டங்களில் ஏற்படுத்துவது சுகாதாரப் பகுதியினரின் தலையாய கடமையாகும்.

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஓட்டமாவடி முஸ்லிம் தேசியப் பாடசாலை அதிபரின் வீடுமீது நேற்றுமுன்தினம் இரவு கைக்குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலினால் வீட்டின் முன்பக்க ஜன்னல் சேதமடைந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற வாலிபரொருவரால் இந்தக் கைக்குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகின்ற போதிலும், அதற்கான காரணம், பின்னணி என்பன பற்றி இதுவரை கண்டறியப்படவில்லை என விசாரணைகளை மேற்கொண்ட வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அதிபர் எம்.எச். காயத்து மொகமத் கருத்துத் தெரிவிக்கையில்,

இதறகு யார் பொறுப்பு, காரணம் என்ன என்பது குறித்து தன்னால் ஊர்ஜிதப்படுத்த முடியாதிருப்பதாக கூறினார்.

இதேவேளை, மட்டு - வாழைச்சேனை வீதியில் கிரான் என்னும் இடத்தில் பலாப் பழங்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்றும் நேற்று முன்தினம் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளது. (உ)

## தினசரி தியானம்

## இறைவன் திருநாமம்

நான் உங்கள் அருகில் வந்து ''ஐயோ தேள்'' என்று சத்தம்போட்டால் உடனே அலறிக் குதிக்கிறீர்கள். ''ரஸகுல்லா'' என்று சொன்னால் நாக்கில் நீர் சுரக்கிறது. ''நீர் கழுதை என்று சொன்னால் கோபப்படுகிறீர்கள்.'' இரத்தம் கொதிக்கிறது. கண்கள் சிவந்து விடுகின்றன. இப்படியான சாதாரண சொற்களுக்கே இவ்வளவு சக்தியென்றால், இறைவனது திருநாமத்துக்கு எவ்வளவு சக்தி இருக்கவேண்டும். பிரகலாதன், மீரா போன்றவர்களுக்கு இந்த சக்தி பற்றித்தெரியும். இறைவனது பெயர் உள்ளத்தைச்சுத்தப படுகிறது இறைவனை நேருக்கு நேர் கொண்டுவருகிறது

**சுவாமி சிவானந்தர்**

யாற்றுகையில்.

யுத்தம் நிறுத்தப்பட்டதனால், ஆயுதப் படையினரும் பொது மக்

எஸ்.பி.திஸநாயக்க ஆகியோருடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டுள்ளார். (பி)

# சைக்கிள் ஓட்டப் போட்டிக்கு பிரபல்யம் தேடச் சட்டம்

(கொழும்பு)

இலங்கைச் சைக்கிள் ஓட்டச் சம்மேளனத்தின் இடைக்காலக் குழு சைக்கிள் ஓட்டப்போட்டியை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்கான சட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

இதன் பிரகாரம் தேசியரீதியில் 8 உபகுழுக்கள் நியமிக்கப்படவுள்ளன. அத்துடன், தேசிய சைக்கிள் ஓட்டத்தினம் விரைவில் பிரகடனப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுவடி ஆமி, சுவடி லங்கா, சுவடி ஜவ்னா போன்ற சைக்கிள் ஓட்டப் போட்டிகள் பிரதான நிகழ்ச்சிகளாக நடத்தப்படவிருக்கின்றன.

இலங்கை சைக்கிள் ஓட்ட வீரர்கள் சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு ஏதுவாக இந்தப் பயிற்சிகள் அமைந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-10)

# தபால் ஊழியர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

(கொழும்பு)

அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் கனிஷ்ட தபால் ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தபால் திணைக்களம் மாற்று ஊழியர்களை வேலைக்கு அமர்த்தவிருக்கிறது.

தபால் பிரித்தல், தபால் விநியோகம் போன்ற வேலைகளிற்கு ஊழியர்கள் சமுகமளிக்காத வேளைகளில் அவர்களின் வேலைகளைக் கவனிக்க ஆட்களைச் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளும்படி தொடர்பாடல் அமைச்சு, தபால் திணைக்களத்திற்கு விடுத்துள்ள பணிப்பினை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிரந்தர ஊழியர்கள் வேலைக்குச் செல்லாத சமயத்தில் அவர்களின் கடமைகளை செய்யவென அமர்த்தப்படும் தற்காலிக ஊழியர்களுக்கு நாளாந்த முறையிலேயே சம்பளம் வழங்கப்படவுள்ளது.

அத்துடன், தபால் அதிபர்கள் தேவை ஏற்படும் போது, இவ்வாறு ஊழியர்களை வேலைக்கு ஈடுபடுத்த தொடர்பாடல் அமைச்சினால் பூரண அதிகாரம் வழங்கப்படவுள்ளது.(உ-10)

# குடாநாட்டு மாணவர்கள் மத்தியில் மதுப்பாவனை அதிகரித்து வருகிறது

## இரவுநேரக் கலாட்டாக்களிலும் இவர்கள் ஈடுபடுவதாக யாழ். பொலிஸார் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் மதுப்பாவனை அதிகரித்து வருவது குறித்து யாழ். பொலிஸ் நிலைய வட்டாரங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இரவு வேளைகளில் போதையுடன் வீதிகளில் திரியும் மாணவர்கள் பலரைத் தாம் விசாரணைக்கு உட்படுத்தியிருப்பதாகவும், வீதிச் சண்டைகள் மற்றும் வீண் வம்புகள் பலவற்றுடன் மதுப் பாவனைக்கு அடிமையான மாணவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதை தாம் அவதானித்திருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதேவேளை, கடந்த வெள்ளியன்று நள்ளிரவில் யாழ். முத்திரைச் சந்திப் பகுதியில் மது மயக்கத்தில் கலாட்டா புரிந்த ஏழு பேரைக் கைது செய்து விசாரித்த வேளை அவர்கள் பிரபல பாடசாலை ஒன்றின் மாணவர்கள் என்பது தெரிய வந்ததை அடுத்து அவர்களின் எதிர்காலத்தையும், கல்வி கற்கும் பாடசாலையின் மதிப்பையும் கருத்திற் கொண்டு அவர்களை விடுவித்ததாகவும்,

இந்த நிலை நீடிக்காது, பெற்றோரும், சமூக நலன் விரும்பிகளும பார்த்துக்கொள்ள வேண்டும் எனவும மேலும் தெரிவித்துள்ளனர்.(உ-4)

# சாகச நிகழ்வு மேடை சரிந்தது பார்வையாளர் 56 பேர் படுகாயம்

(கொழும்பு)

சாகச நிகழ்வு ஒன்றிற்காக அமைக்கப்பட்டிருந்த மேடை சரிந்து விழுந்ததில் பார்வையாளர்களாக இருந்த 56 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பிட்டிக்கல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்களில் 30 பேர் கராப்பிட்டிய வைத்திய சாலையிலும் 26 பேர் பிட்டிக்கல வைத்திய சாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 6 பேரின் நிலைமை கவலைக் கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (தி)


## பொதுக்கூட்ட அறிவித்தல்

**வேலணை வங்களாவடி முருகன் ஆலய பரிபாலன சபைப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 28.07.2003 ஆடி அமாவாசைத்தினத்தன்று பி.ப. 3.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் இக்கூட்டத்திற்கு ஆலயத்தின் நித்திய நைமித்திய உபயகாரர்கள், வழிபடுநர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் அழைக்கிறேன்.**

நன்றி

செயலாளர்,
பரிபாலன சபை,
வேலணை வங்களாவடி
முருகன் ஆலயம்.

(7279)


## "இன்னொரு போர்முகம்" நேற்று வெளியிடப்பட்டது

மருத்துவப் போராளி தூயவன் எழுதிய ''இன்னொரு போர்முகம்'' என்னும் நூல் வெளியீட்டு விழா கிளிநொச்சியில் அமைந்துள்ள மாவீரர் லெப்டினன் கேணல் தூயவன் அரசறிவியல் கல்லூரியில் நேற்றைய தினம் இடம்பெற்றது.

கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொது ஈகச் சுடரினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றிவைத்தார்.

வரவேற்புரையினை மருத்துவப் போராளி ஜோன்சனும், நூல் அறிமுக உரையினை வெளிச்சம் சஞ்சிகை ஆசிரியர் கருணாகரனும் மதிப்பீட்டுரைகளை ஆசிரியர் நிலாந்தனும், கவிஞர் புதுவை இரத்தினதுரையும்; சிறப்புரையினை புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரனும் நிகழ்த்தினர். நூலின் முதற்பிரதியினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணித் தளபதி நகுலன் வெளியிட்டு வைக்க மாவீரர் மேஜர் குணாவின் சகோதரி பெற்றுக் கொண்டார். (ந-3)

## இடைக்கால...

இலங்கை அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சு வார்த்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வடக்கு, கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படுவது அவசியமாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளுக்கு தென்னிலங்கையில் வாழுகின்ற சிங்கள மக்களும் அரசியல் கட்சிகளும் தமது ஆதரவை வழங்குவதன் மூலமே நாட்டின் நிரந்தர சமாதானத்தை ஏற்படுதத முடியும் என்றும் தெரிவித்தார்.

(ம)

## வெளிநாடுகளில்...

சகர் அன்ரன் பாலசிங்கம் உட்பட மற்றும் விடுதலைப் புலிகளின் சட்ட வல்லுநர்களுக்கும் திட்டவரைபு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் மற்றும் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்கள் திட்ட வரைபை மிகவும் அவதானமாகவும் நுணுக்கமாகவும் ஆராய்ந்து வருவதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

## வேலணைப் பிரதேச மலர் வெளியீடு

வேலணைப் பிரதேச சபை நடாத்தும் உள்ளூராட்சி வார நிறைவு விழாவும் "வேலணை பிரதேச மலர்" வெளியீடும் கலை நிகழ்வுகளும் இன்று மாலை 6 மணிக்கு வேலணை பிரதேச சபை திறந்த வெளி அரங்கில், வேலணை பிரதேச சபை செயலாளர் செ. சண்முகராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.(உ-83)

## அமெரிக்க...

இதேவேளை, கடந்த தடவை நடைபெற்ற உயர் இரகசியம் வாய்ந்த புலனாய்வுத் தலைவர்களின் கூட்டத்தில் பங்குபற்றியிருந்த அமெரிக்கப் பிரஜை உடனடியாக நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென ஜனாதிபதி குமாரதுங்க உத்தரவிட்டிருந்தார். அந்தப் புலனாய்வு அதிகாரி, கூட்டத்தில் பங்கு பற்றுவது பற்றி முப்படைகளின் பிரதம தளபதியாகிய தனக்கு எதற்காக அறியத் தரப்படவில்லை என்று கடந்த செவ்வாய்க்கிழமை பாதுகாப்புச் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவிடமும், பாதுகாப்பு ஆலோசகர் குணரட்ணவிடமும் கேட்தற்கு, அமெரிக்காவின் இவ்வுதவி, அமைச்சர் மிலிந்த மொறகொடவின் நல்லெண்ண ஏற்பாடுகள் மூலம் பெறப்பட்டது என்று பதிலளித்ததாகத் தெரிய வருகிறது. (த)

## அமைச்சரவையின்...

வரைபை நோர்வேயின் முன்னாள் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க மூலம் விடுதலைப் புலிகளின் தலைமைக்கு அனுப்பிவைத்துள்ளோம். விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபையை சட்டரீதியாக இல்லாமல் இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே கோரியுள்ளனர்.

இத்தகைய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை அமைச்சரவையின் தீர்மானம் ஒன்றின் மூலமோ அல்லது சுற்றுநிருபம் ஒன்றின் மூலமோ அமைக்க முடியும். இலங்கையின் அரசியல் வரலாற்றில் இத்தகைய நிர்வாகக் கட்டமைப்புகள் முன்னரும் உருவாக்கப்பட்டுள்ளது. 1972ஆம் ஆண்டு மாவட்ட மற்றும் தொகுதி ரீதியாக அமைக்கப்பட்ட அபிவிருத்திக் குழுக்களும் இத்தகைய அமைப்புக்களே ஆகும்.

அரசாங்கம் தற்போது மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு நாட்டு மக்கள் அனைவரதும் பூரண பங்களிப்பு அவசியமாகும். இது விடயத்தில் சமாதான நடவடிக்கைகளுக்கு கொள்கையளவில் இணக்கம் தெரிவிதத்துள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணியின் பங்களிப்பையும் பெறுவதற்கு நான் உத்தேசித்தேசித்துள்ளேன் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இககூட்டத்தில் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கட்சியின் செயலாளா நாயகம் ஜனரத்கப்புக் கொட்டுவ, கட்சிகளின் தலைவர் மஙிக சமரவிக்கிரம, பிரதித் தலைவரும், அமைச்சருமான கரு ஜெயசூரிய ஆகியோரும் கலந்து கொண்டனர்.(ம)





உங்கள் வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்

- மீசாலையில் கொடூரம் பெற்றவனே தனயனைக் கொன்றான்
- இஸ்ரேலில் ஆயுதக் கொள்வனவு
- அரியாலை நெடுங்குளத்தில் மனிதப் புதைகுழி
- ஆலடி மாநாடு
- வியாசரின் பதில்கள்
- செங்கை ஆழியானின் ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
- பொன். கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல

விலை ரூபா. 14.00

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.07.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.